இதழ்-35

16.10.2021

# தும்பி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# முருகனடி சேர்ந்தார் நல்லூரான்!




அண்மையில் முருகனடி சேர்ந்துள்ள நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆத்மாவிற்கு துமி தனது புகழ் வணக்கங்களை காணிக்கையாக்குகின்றது.

சமயம் கூறும் அடிப்படை தத்துவமாகிய சமத்துவத்தை நல்லூர் ஆலயத்தில் நிலைக்க வைத்தார். வரலாற்றில் நிலைத்திருக்கும் தென்னாசிய பிராந்திய வல்லரசாகிய இந்திய பிரதமரின் யாழ்ப்பாணம் விஜயத்தின் போது ஆடையுடன் ஆலயத்தினுள் செல்ல நல்லூ ர் நிர்வாகம் மறுத்தமையால் பாரத பிரதமரின் நிகழ்ச்சி நிரலே மாற்றப்பட்டது. ஆண்டியாயினும் அரசனாகியினும் முருகப்பெருமான் முன்னே சமமென உறுதியான கொள்கையை இறுக பற்றினார்

மேலும் நேரம் தவறாமையை உலக மாந்தர்களுக்கு முன்னுதாரணமாக செயற்பட்டார். இங்கு பலரும் காரணங்களை நிரல்படுத்தி நேரந்தவறுகிறமையை வழக்கமாக்கி வைத்திருக்கையில் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நேரந்தவறாமை பலருக்கு முன்னுதாரணமே ஆகும். குறிப்பாக இலங்கையின் நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி ஒருவர் காலை பூசையின் பின்னர் வந்து ஆலயத்தை திறக்க பணித்த போது மறுத்தமை அவரின் தனித்துவத்தை அடையாளப்படுத்தியது.

அது மட்டுமன்றி யாழ்ப்பாண மாநகரசபையின் இருப்பிற்கு இலவசமாக காணி வழங்கியதனூ டாக அரச நிர்வாகத்துக்கான சமய நிறுவன ஒத்துழைப்பின் அவசியப்பாட்டையும் உறுதி செய்துள்ளார்.

நல்லூர் இன்று யாழின் அடையாளமாகியுள்ளது. அவ் அடையாளத்தினூடாக எம் சமூக பழக்கத்தை பறைசாற்றியமை அவரது புகழையும் நிலைப்படுத்தியுள்ளது. இப்புகழின் தொடர்ச்சியை மேலும் வலுப்படுத்தி சமூகத்தின் தேவைளை அறிந்து பயணிக்கும் நிறுவனமாக நல்லூ ரை புதிய நிர்வாம் பதிவு செய்யும் என்ற நம்பிக்கையில் புதியவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் துமி பரிமாறி கொள்கிறது.



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 குரும்பைகள் உதிரலாமா?
06 சிங்ககிரித்தலைவன்
09 முருகையனின் கவிதைகளில் மனித நேயம்
13 ஓசோன் படையின் பாதிப்புக்கள்
16 துமியாரின் பதில்கள்
19 பொக்கைவாய்ப் பற்கள்
20 நம்பினால் நம்பியும் அறிவாளி
23 கிராமத்து இளைஞர்கள்
26 ஒரு பெண்ணோடு தோன்றிடும் தாபம்
30 குறுக்கெழுத்துப்போட்டி
31 ஈழச்சூழலியல்
35 சித்திராங்கதா
40 ரி20 உலகக் கிண்ண அணிகளின் அலசல்

# குரும்பைகள் உதிரலாமா?

காரணங்கள் இன்றி இங்கே எதுவுமே நடப்பதில்லை என்பார்கள். அன்று நடந்த நாடுகாண் பயணங்களுக்கு மட்டுமல்ல என்றும் நடந்து கொண்டிருக்கும் நத்தையின் பயணத்திற்கும் காரணங்கள் இருக்கின்றன. ஊதப்படும் குழலுக்கு மட்டுமல்ல ஊற்றப்படும் பாலுக்கும் காரணங்கள் கனமாகவே இருக்கின்றன. காய்ந்து போன சருகுக்கும் மாய்ந்து போன உயிருக்கும் கூட காரணங்கள் இருக்கின்றன.

எங்கும் எதிலும் காரணங்கள் இருக்கின்றன என்றால் அந்த காரணங்கள் இயற்கையானதா? செயற்கையானதா?

ஒரு சம்பவத்திற்கான காரணம் அந்த சம்பவம் நிகழும் காலத்திற்கு முற்பட்டதா? பிற்பட்டதா?

இந்த இரண்டு கேள்விகளுக்குமான விடைகள் ஒன்றுக்குள் ஒன்று புதைந்து கிடக்கிறது. அதாவது இந்த கேள்விகளின் சராம்சம் என்னவென்றால் காரணங்கள் இருப்பதனால் காரியங்கள் நடக்கின்றனவா? அல்லது காரியங்கள் நடந்ததனால் அதற்கான காரணங்கள் தேடப்படுகின்றனவா?

மழை பொழிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே ஆகாயத்தில் நடந்து விட்ட தாழமுக்க வேறுபாடுகள்தான் இயற்கையான காரணம். ஆனால் அங்கே ஒருவர் பல நாட்களுக்குப்பிறகு தன் பெற்றவர் வீட்டிற்கு வந்திருக்கிறார். வராதவர் வந்ததால் மழை பெய்ததாக பேசிக்கொண்டார்கள். இது செயற்கையான காரணம். காரணத்தை சம்பவம் நடந்த பின் பொருத்திப்பார்க்கிறார்கள். இயற்கையான காரணங்கள் எப்போதும் புலப்படுவதில்லை. அதை அறிய ஆழமான ஆய்வும், நிதானமும் தேவை. அதற்கு பொறுமை இல்லாத மனம் உடனடி ஆறுதலுக்கு ஒரு



காரணத்தை தேடி அலையும். அதுவாக ஒன்றை ஊகித்து ஆறுதல் அடையும். செயற்கை காரணங்கள் தோன்றுவதன் இயற்கைத்தன்மை இதுதான்.

இங்கும் இப்படித்தான். ஒரு குரும்பை உதிர்கிறது. தேங்காய் ஆவதை இலக்காகக் கொண்டு தென்னம் பாளையை கிழித்துக் கொண்டு வந்து உதிராமல் உருப்பெற்ற அந்த தென்னம் பூ மெல்ல மெல்ல குரும்பையானது. பரவிய வேரால் மண்ணில் உறிஞ்சிய நீரையும் உரத்தையும் தண்டினூடு கடத்தி பூவானது குரும்பையாகும் செயற்பாட்டிற்கு பெரிய சக்திச் செலவே நிகழ்ந்திருக்கிறது. இந்தச் சக்திச் செலவு வீண் செலவாவதை யார்தான் விரும்புவார்கள்? குரும்பைகளின் இந்த குறை ஆயுள் அவலத்திற்கு காரணங்கள் பல சொன்னார்கள். மண்ணில் பிழை என்றார்கள். மரத்தில் பிழை என்றார்கள். உரத்தில் பிழை என்றார்கள். காரணங்கள் தெரிந்தால் தவறுகளை சரிசெய்யலாம்தானே? ஆனால் குரும்பைகள் உதிர்வது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறன.

தென்னை மரத்தில் குரும்பைகள் மட்டுமல்ல இந்த மண்ணில் குழந்தைகள் சிலவும் இவ்வாறு உதிர்கின்றன. பத்துமாத வலி பொறுத்து ஆயிரம் கனவுகளுடன் ஒரு பிள்ளையை பெற்றெடுத்து, உதிரத்தை பாலாக்கி வளர்த்தெடுத்த குழந்தைகள் அற்ப ஆயுளுடன் தம் பயணத்தை முடித்துக் கொள்வது எவ்வளவு கொடுமை? இதற்கும் காரணங்களை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அதனால் நடந்ததா? இதனால் நடந்ததா? என்பதல்ல முக்கியம்! எதனால் நடந்தாலும் இனி நடக்காதவாறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

***எங்கள் மண்ணில் இனி...
குரும்பைகள் மட்டுமல்ல,
குழந்தைகளும் உதிரக்கூடாது!***

## மீன் சாப்பிடும் போட்டி

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் நடைபெற்ற 12 கரடிகள் பங்கேற்ற கரடிகளுக்கான மீன் சாப்பிடும் போட்டியில் Otis எனும் கரடி நான்காவது முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இந்தக் கரடியின் பெயரில் நன்கொடையாக நிதி திரட்டப்பட்டு கரடிகளை பாதுகாக்கும் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.



ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 33

## ஒரு பையில் தலை!

தீவட்டிகளை மிக அழகாக சுழற்றியபடி ஆடல் வல்லுனர்கள் அந்த அலங்கரிக்கப்பட்ட, யானையின் முன்பதாக அணியணியாக நடந்த வந்தனர்!

மத்தளங்களை அடித்துக் கொண்டும் சங்குகளை ஊதிக் கொண்டும் கொம்புகளால் ஒலி எழுப்பியவாறும் அந்த ஊர்வலம் மிக நீண்டதாக மெதுமெதுவாக அனுராதபுரத்தில் இருந்து சிகிரியாவை நோக்கி வந்து கொண்டிருந்தது. மக்கள் மிகுந்த ஆரவாரத்துடன் அந்த ஊர்வலத்தை பின்தொடர்ந்தனர்.

“இனி அனுராதபுரம் தலைநகரமாக இருக்காது. சிங்ககிரியே தலை நகரமாக அரசனின் உறைவிடமாக இருக்கும்.”
என்கின்ற செய்தி மக்களிடையே வெகுவாகப் பரவி இருந்தது. இதனால் அங்கு சென்று குடியேறுவதற்காகவும் சிலர் மாட்டு வண்டிகளில் தங்கள் உடமைகளைக் கட்டிக் கொண்டும் ஊர்வலத்தைப் பின் தொடர்ந்தனர்.

அந்த ஊர்வலம் சிங்ககிரியை சென்றடைய நாளை இரவு ஆகலாம்! அதனால் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு உணவுப் பண்டங்களும், குடிக்க நீரும் அரச வீரர்களால் அவ்வப்போது வழங்கப் பட்டுக் கொண்டிருந்தது. இதற்கெல்லாம் காசியப்பன் உத்தரவிட்டிருந்தான். அந்த ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்து வருகிற காட்சி கண் கொள்ளாக் காட்சியாக அமைந்தது! அனுராதபுரத்தின் ராஜ வீதியைக் கடந்து புத்தரின் புனித



தந்த தாதுவை சுமந்து வருவதாகச் சொல்லப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட யானை இப்போது சிங்க கிரியை நோக்கி நகரத்தொடங்கியது!

அதே நேரம் சிங்ககிரியில், அமைக்கப்பட்ட பிரத்தியேக மேடையில் புத்தரின் வாழ்க்கை சரிதம், நாடக கலைஞர்களால் நாடகமாக அரங்கேற்றப்பட்டு கொண்டிருந்தது. அந்த நாடகத்தை மன்னன் காசியப்பன் தன் ஆசை மனைவி லீலாவதியுடன் முன் இருக்கையில் அமர்ந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய நினைவுகள் எல்லாம் புனித தந்த தாதுவைப் பற்றியும் அதை கவர்ந்து சென்ற மகாநாமர் மீதும் இருந்தது.

மகாநாமரை நினைத்து ஆத்திரப்ப டுவதா? அல்லது தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணி வெட்கப்ப டுவதா? என்று தெரியாத அளவுக்கு அவன் மனநிலை இருந்தது.

போலியாக தயாரிக்கப்பட்ட பெட்டகத்துக்குள் புத்தரின் புனித பல் இல்லை என்கின்ற விடயம் காசியப்பனுக்கும் மீகாரனுக்கும் தான் தெரியும்.

எப்படியாவது வீரர்களையோ, ஒற்றர்களையோ தமிழகத்துக்கு அனுப்பி, மகாநாமரால் அவரின் ஒற்றர்கள் மூலம் கவரப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட புத்தரின் புனிதப் பல்லை மீண்டும் சிங்ககிரிக்கு கொண்டு வரவேண்டும் என்கின்ற திட்டம் காசியப்பனின் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அதை அடையும் வரை இனி அவன் உறக்கம் தொலைத்தவனாகவே இருப்பான்!

“தாங்கள் நாடகத்தைப் பார்ப்பதற்கு பதிலாக வேறு ஏதோ சிந்தனையில் இருப்பது போல் தோன்றுகிறது” இப்படி உங்களோடு அமர்ந்திருந்து கலை நிகழ்வுகளை கண்டு கழிக்க வேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாள் கனவு இன்று நிறை வேறியது. ஆனால் உங்களின் மனம் தான் எங்கோ போய்விட்டது..” என்று லீலாதேவி மெல்லியதாக காசியப்பனின் காதருகில் கூறினாள்.

“அன்பே” எல்லாம் நான் உருவாக்கப் போகும் இந்தப் புதிய ராஜ்ஜியத்தை பற்றித்தான். எத்தனை தடைகளை, எத்தனை துரோகங்களை, நான் சுமக்க வேண்டியிருக்கிறது... காலம் எனக்கு மணி முடியோடு பல படிப்பினைகளையும் தந்திருக்கிறது. இந்த நாடகத்தில் நாட்டமிலாமைக்கு அந்த நினைவுகளே காரணம்... ம்ஹும்...” என்று பெரு மூச்சு விட்டான் காசியப்பன்!

“எத்துணை பெரிய சவாலையும் முறியடித்து விடும் ஆற்றல் உங்களிடம் இருப்பதை நான் நன்கு அறிவேன் இருந்தாலும் உங்களுடைய இந்தக் குழப்பமான மனநிலையை கண்டு என் மனம் கலங்குகிறது. நீங்கள் திடமாக இருக்கும் போது தானே இந்த ராஜ்ஜியமும் திடமாக இருக்கும்...” என்றவள் காசியபனின்

முரட்டுக்கைகளைத் தனது கைகளால் அணைத்துக் கொண்டாள்.

“லீலா.... நீ சொல்வது உண்மை தான்! என்னையும் மீறி நடந்த விடயங்களையும் சரி செய்து கொண்டு முன்னோக்கி நடக்க வேண்டும்...”
சித்தர்த்தர் அரண்மனையை விட்டு வெளியேறும் காட்சி மேடையில் அரங்கேறிக்கொண்டிருந்தது...

“உலகே பொய்...
உறவே பொய்...
உடமைகள் பொய்...
பற்றை விடுவாய்...
பாசம் மறப்பாய்...
புதிய தேசம் படைப்பாய்...”

என்ற பாடலைப் பின்னணியில் பாடிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாடலை மட்டும் உன்னிப்பாகக் கேட்ட காசியப்பன், தன் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு லீலாவை இருக்கையிலேயே அமர்த்திவிட்டு, மெல்ல எழுந்து அப்பாலே போனான். அந்த இருளில் அவன் போனதைப் பெரிதாக எவரும் அவதானிக்கவில்லை. எல்லோரும் நாடகத்தில் தம்மை மறந்து இலயித்துப் போய் இருந்தனர்.

தூரத்தில் ஒரு தீப்பந்தம் மரத்தில் கட்டப்பட்டிருந்தது. அதன் அருகினில் ஒரு தீப்பந்தம் அப்படியும் இப்படியுமாக அசைந்து கொண்டிருந்தது! அது காசியப்பனுக்கான சைகையாக இருக்க வேண்டும். அதற்கு அருகிலே போன காசியப்பனை அந்த தீப்பந்தத்தை அசைத்த உருவம் வணங்கி நின்றது!

“மல்லா... மீகாரன் எல்லாம் தெளிவாகக் கூறியிருப்பான். மேலதிகமாக நான் கூறவேண்டியதில்லை. ஒரு பையில் புனிதப்பல்லையும் ஒரு பையில் அந்தக்கிழவனின் தலையையும் கொண்டுவா! இந்தா இதை பெற்றுக்கொள்...!” சில தங்கக் காசுகள் மல்லனின் கைகளில் விழுந்தன...

மல்லன் தேர்ந்த வில்லாளி! விச அம்புகளைக் கையாள்வதில் வல்லவன், காசியப்பனின் இரகசிய படையில் இருந்தவன். இவன் மூலமாக தாதுசேனரைக் கொல்லும் திட்டத்தை மீகாரன் வகுத்த போதும் அதை ஏனோ காசியப்பன் முன்னரே மறுத்துவிட்டான். இப்போது மகாநாமரைக் கொல்வதற்கு அனுப்பிவைக்கின்றான்!

மல்லன் அவ்விடம் விட்டுப்போனதும், காசியப்பன் மெல்ல நகர்ந்து வந்து தன்னாசனத்தில் அமர்ந்து கொண்டு லீலாவை அணைத்துக்கொண்டான்! இப்போது அந்த அணைப்பில் ஒரு தெளிவு இருந்தது. அவன் மூச்சின் வேகமும் வெப்பமும் குறைந்திருந்தது... இந்தக் குறிகாட்டிகளே லீலாவுக்குப் போதுமானவையாக இருந்தன...

**நாடகம் தொடர்ந்தது.....**

# முருகையனின் கவிதைகளில் மனிதநேயம்

பிரசாந்தி ஜெயபாலன்


ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வீறுடன் எழுச்சி பெற்ற காலப்பகுதியாகக் கருதப்படும் 1950 களில் எழுதத்தொடங்கி ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளில் ஒருவராகப் போற்றப்படும் கவிஞர் இ.முருகையனின் கவிதைகள் பல் பரிமாண நோக்கில் ஆராயப்படத்தக்க வகையில் காத்திரம் வாய்ந்தவை யாக விளங்குகின்றன. இது வரை எண்ணிலடங்காக் கவிதை களைப் படைத்துள்ள இவரின் கவித்துவத்தினை இவரது ஒருவரம், வந்து சேர்ந்தன, தரிசனம், நெடும்பகல், கோபுரவாசல், ஆதிபகவன் முதலான இவரது நூல்களில் கண்டுணர முடிகின்றது. இத்தகைய சிறப்புத்தன்மை பொருந்திய இவரது கவிதைகள் பல்வேறு தளங்களில் நின்று படைக்கப்பட்டிருப்பினும் குறிப்பாக இருதளங்களினூடாக அவற்றை நாம் ஆராயலாம்.

01. அறிவுத்தளம்
02. உணர்வுத்தளம்

அறிவும், உணர்வும் எப்போதும் எதிரெதிரானவையே. எவ்வாறெனில் சில விடயங்களில் மூளை அதாவது எமது அறிவு எமக்கு சரியானதைத் தெரியப்படுத்தினாலும் நாம் எமது மனதின் போக்கில் அதாவது உணர்ச்சிகளின் வழிகாட்டலில்த்தான் பயணிப்போம்.

ஆனால் முருகையன் தனது கவிதைகளை அறிவியல்ப்பூர்வமாக உண்மைத் தன்மைகளை வெளிக்கொணரும் வகையிலும் அதேநேரம் அவற்றை உணர்வு பூர்வமாகவும் பதிவுசெய்திருப்பதைக் காணமுடிகின்றது. இவ்வகையில் இவ்விரு தளங்களையும் அடிப்படை யாகக் கொண்டு சமூகம் சார்ந்த மனிதநேயச் சிந்தனையுடன் பெரும்பாலான கவிதைகள் படைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.


மனிதநேயம் என்பது அன்பு, கருணை, இரக்கம் மற்றும் சமூக நுண்ணறிவு என்பவற்றுடன் தொடர்புடையதாக



சகமனிதர்களிடம் அன்பு காட்டுதல் எனக்கூறலாம். இதில் உயிர்கள் மீதான இரக்கம் என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்வகையில்,

01. சகமாந்தர்களிடம் அன்புறவைப் பேணுதல்
02. சாதீய ஒடுக்குமுறையை எதிர்த்தல்
03. தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்தல்
04. வறுமைத்துயர் போக்க உழைத்தல்
05. மனிதர்களை மட்டுமன்றி ஏனைய உயிரினங்களையும் மதித்தல்

என்கின்ற அடிப்படையில் முருகையனின் கவிதைகளில் மனிதநேயத்தன்மையை இனங்காண


கவிதை நயம்

கலாநிதி க. கைலாசபதி & கவிஞர் இ. முருகையன்

கவிதையை நயத்தல் என்பது முடிவற்ற பயிற்சியாகும். அதனைக் கருதியே 'நவில்தொறும் நூல் நயம்' என்றனர் வள்ளுவர். 'அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டறிதல்' என்னும் கற்றல் விதி, கவிதையையும் உள்ளடக்கியதுதான். இவ்வுணர்வுடன் இயற்றப்பட்டதே இச்சிறு நூல். பொதுவாக இலக்கிய ரசிகர்களும், சிறப்பாக கவிதை கற்கும் மாணாக்கரும், கவிதை கற்பிக்கும் ஆசிரியரும் பயன்படுத்தக் கூடிய விதத்தில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

க. கைலாசபதி (1933-1982): இவர் தமிழ்த் துறையில் இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (பேராதனை), கலாநிதிப் பட்டத்தினை புகழ் பெற்ற மாக்சிய அறிஞரான ஜோர்ஜ் தோம்சனின் கீழ் இங்கிலாந்திலுள்ள பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திலும் பெற்றார். 'தினகரன்' தேசிய பத்திரிகையில் ஆசிரியராக பணியாற்றியபின் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராக பணியாற்றினார். பின்னர் 1974இல் புதிதாக உருவான யாழ்ப்பாண வளாகத்தின் தாபகத் தலைவராக நியமிக்கப்பட்டார். யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியராக தமது மறைவு வரை பணியாற்றினார்.

இ. முருகையன் (1935-2009): இலங்கையின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவரான இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அறிவியற் துறை பட்டத்தினையும் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணி, கௌரவ கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுக்கொண்டவர். அறிவியல் ஆசிரியர், இயற்பியல் / கணித நூற் பதிப்பாசிரியர், தமிழ்மொழி பாடநூல் முதன்மைப் பதிப்பாசிரியர், கல்விப் பணிப்பாளர், பல்கலைக்கழக நிர்வாகி என பலநிலைகளில் பணியாற்றிய இவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரும் ஆவார்.

ISBN 978-955-659-260-3

9 789556 592603

விலை ₹ 70.00

குமரன் புத்தக இல்லம்

விடயம்: தமிழ் இலக்கியம்

#70

முடிகின்றது. வறுமையால் துயருற்றவர்கள், சாதியத்தின் பெயரால் ஒடுக்கப்படுபவர்கள், முதலாளிகளால் சுரண்டப்படும் தொழிலாளிகள் என அனைவரது போராட்டங்களையும் பிரச்சினைகளையும் கவிதைகளில் பதிவுசெய்திருக்கும் தன்மையே மனிதநேயத்தின் வெளிப்பாடாகின்றது. சான்றாக "தீ பரவட்டும்" என்ற கவிதையை நோக்கின்,

"பசி அணைந்த வாழ்வினர்கள் பதறி அழவும்
பணம் அமைந்த வாழ்வினர்கள்
உதவிதர ஏன் பிசகி விட்டார்?"

என அறிவுத்தளத்திலே நின்று மனிதநேயத்துடன் வினாத்தொடுப்பவர்,

"அவர்கள் குலம் பய்ந்து கருக
பீறி எழுந்து ஓங்கிடட்டும்
பரவட்டும் தீ.."

என உணர்ச்சிப் பிழம்பாக கோபக்கனலைக் கக்குகின்றார். இவ்வாறே,

"தொலைக வெறுப்புரைகள்
சுயநலம் இற்றொழிக
தொழில்கள் மிகப்பெருக
வழிகள் திறப்படைக"

என "ஒருமுனையில் திரள்க" என்ற கவிதையில் சுயநலத்தையும், வெறுப்புக்களையும் ஒழித்து பல தொழில்களைச் செய்வதற்கான வழிகளைத் திறப்போம் என

மனிதநேயத்துடன் அறைகூவல் விடுக்கின்றார்.

“நரகொழிப்பு” என்ற கவிதையில் பல்வேறு விடயங்கள் குறித்துப்பேசும் கவிஞர் குறிப்பாக சாதிவேற்றுமையை “நரகம்” எனச்சித்திரித்து அந் நரகத்தினை ஒழிப்பதற்கு மானிட சமூகத்தினை அழைத்து நிற்பது அவரது மனிதநேயத்தினையே புலப்படுத்துகின்றது. நீண்டுசெல்லும் இக்கவிதையில் பிறப்பு, இறப்பு என்பவை பற்றியெல்லாம் தெளிவாக எடுத்துரைத்து மக்கள், தேவர், நரகர் உயர்திணை மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை என்ற இலக்கணகாரரின் கூற்றினையும் தெளிவுபடுத்தி,

“அட்டையை நசுக்குதல் கெட்ட செயல் எனப்
புத்தி புகட்டிய பெட்டை இப்போது
சட்டை இல்லாத தன்மையள் ஆகி
உள்ளூர்ப் புறத்திலோர் சேரிக்கரையிலே
தள்ளி ஒதுங்கித் தனியே கிடந்த
குடியிருப்பொன்றிலே அவள் வதிகின்றாள்.”

என்றவாறு அட்டை என்கின்ற ஊரும் பிராணியை நசித்தலே



கெட்டசெயலென அடுத்தவர்களுக்கு எடுத்துரைத்து உயிர்களை மதிக்கத் தெரிந்த பெண்ணை “சாதி” என்னும் பெயரால் ஊரின் ஒதுக்குப்புறத்திலே ஒதுக்கிவைத்த சமூகத்தைச் சாடும் முருகையன்,

“பழையதோ புதியதோ நரகம் நரகமே!
யாவரும் கூடி நரகினை ஒழிக்கப்
பெரிதும் முயல்வாரே எனினும்
நரகொழிப்பு இன்னும் நடந்தபாடில்லையே..”

என்பதில் அவர் நரகென உவமிக்கும் சாதிவேறுபாடு இன்னும் ஒழிந்துபோகவில்லை என்ற நிதர்சனத்தை எமக்கு உணர்த்துகின்றார்.

இவ்வாறே தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் பல கவிதைகளில் மனிதாபிமானத்துடன் பதிவுசெய்துள்ளார். சிறுவர் தொழிலாளர்களின் நிலை குறித்துப்பேசும் “மாடும் கயிறுகள் அறுக்கும்” என்ற கவிதையில் கவிஞரின் மனிதாபிமானச் சிந்தனை மட்டுமன்றி,

“மாடு மாடென ஏசுகிறீர்கள்
மாடும் கயிறுகள் அறுக்கும்
ஆடவர் மகளிர் அது செய்யாரோ”

என அடிமைத் தளையிலிருந்து அவர்களை மீட்டெடுக்க விளையும் விடுதலை உணர்வும் மேலோங்கியிருப்பதைக் காணலாம்.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் முருகையன் குறித்துப் பேசும்போது, முருகையனின் கவிதைகளுடைய சிறப்பு யாதெனில் அவர் உணர்ச்சி நிலைப்பட்ட கவிஞர் அல்லர், மாறாக அவர் ஒரு 'Intellectual Poet' அதாவது புலமைத்துவ நிலையில் இருந்த கவிஞர் என்கிறார்.

இக்கூற்று ஏற்புடையதாயினும் என்னதான் அவர் விஞ்ஞானபூர்வமாக அறிவியல் ரீதியாக சிந்தித்திருப்பினும் அவற்றுடன் உணர்வுபூர்வமாகவும் சிந்தித்து மனிதநேயத்தை வெளிப்படுத்தும் வகையில் கவிதைகளைப் படைத்துள்ளார் என்பதே உண்மையாகும்.

இவ்வகையில் சமூக அவலங்கள், ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், வறுமைத்துயர் அனைத்தையும் மனிதாபிமானத்துடன் நோக்கி அறிவுபூர்வமாக அவற்றின் உண்மைத்தன்மையை எடுத்துரைத்து சமூகவிடுதலையை அவாவிநிற்கும் ஒரு மானிடநேயக் கவிஞனாகவும் முருகையன் பரிணமிப்பதை இனங்காண முடிகின்றது.

## அறம் செய்வோம்........!



அமரர் சின்னத்தம்பி தம்பிராசா அவர்களின் முதலாம் ஆண்டு திதியை முன்னிட்டு அவரது குடும்பத்தார்கள் துமி அமைப்பினூடாக கடந்த ஒக்டோபர்-02 அன்று சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் சிறார்களுக்கு மதிய உணவை வழங்கி இருந்தார்கள்.





அதிரன்






# சர்வதேச ஓசோன் படலத்தின் பாதிப்பு மனித குலத்திற்கான சிவப்பு எச்சரிக்கை

2

ஹெலோலோன், மெத்தில் புரொமைஸ், காபன் மெற்றா குளோரைட், மெத்தில் குளோரோ போம் என்பனவும் ஹைரோகாபன்களாகும். அவற்றின் அழிவுகளின் மூலம் கிளோரித், பிரோமித் போன்ற ஹைசவின் பிரிவொன்றும் உருவாகும். இவை மண்ணிலிருந்தும் கடல், நீராவி என்பவற்றில் இருந்தும் வெளிப்படுகின்றது. இது தவிர இயற்கையாக எரிமலைகள், பருவமாற்றங்கள், சூரியவட்டம், காற்றின் வேகம் இவற்றினாலும் ஓசோன்படை பாதிப்படைவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும், கைத்தொழில் பேட்டைகளில் இருந்து உருவாகும் சூழலை மாசுபடுத்தும் வாயுக்களாக குளோரோ புளோரா காபன், மெதேன், நைதரசன் ஒக்சைட் போன்ற வாயுக்கள் 100 – 125 ஆண்டுகள் வரை வளிமண்டலத்தில் நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தன.

எனவே, இவை படிப்படியாக ஓசோன் படலத்தில் உள்ள ஓசோன் மூலக்கூறுகளுடன் தாக்கமடைந்து சுயாதீன ஒட்சிசன் மூலக்கூறுகளை உருவாக்கி ஒட்சிசன் படலத்ததைப் பிரிகையடையச் செய்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன.


கீழ் வளிமண்டலத்தில் இப் பொருட்கள் எமது சுற்றாடலுக்கு எது வித தாக்கங்களையும் ஏற்படுத்தாது. எனவே கைத்தொழிலுக்காக இவற்றின் பாவிப்பு அதிகளவாகக் காணப்படுகின்றது. எனினும் இவை சுற்றாடலில் கலந்ததன் பின்பு கீழ் வளிமண்டலத்தில் உள்ள ஏனைய வாயுக்களும் தாக்கங்களை ஏற்படுத்தாது. படிப்படியாக மேல் வளிமண்டலம் வரை இந்த வாயு, அதிகளவான சக்தியினை சூரிய ஒளிக்கதிர்கள் UV (Ultra Violet) உடன் ஒன்றிணைந்து கிளோரின்



அல்லது பிராமிக்த் ஹெலயிட் ஓசோனுடன் செயற்பட்டு கிளோரின் அல்லது பிரோமின் மொனோ ஒக்சைட்டின் உற்பத்தி செய்யும்.

இங்ஙனமாக உற்பத்தியாகும் அணுக்கள் மீண்டும் சிதறி ஹெலயிட் அணுவினை அழிக்கும். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறும். இதன் மூலம் தொடர்ச்சியாக ஓசோன் அணுக்கள் அழிக்கப்படும் என விஞ்ஞானிகளின் ஆய்வுகளின் பிரகாரம் கண்டறிந்துள்ளனர். ஒரு கிளோரிக் அணுவிற்கு ஒரு மில்லியன் ஓசோன் அணுக்கள் குறைவதினால் ஓசோன் படலத்தின் தடிப்புக் குறையும். எனவே, இங்ஙனம் ஓசோன் படலத்தின் தடிப்பு குறைதலை ஓசோன் துவாரம் என அழைப்பார்கள். ஓசோன் துவாரத்திற்கான காரணத்தை ஆராய்ந்து முன்மொழிந்தவர் அமெரிக்க இரசாயனவியலாளரான சேர்.வூட்ரவ்லண்ட் என்பவராவார்.

ஓசோன் துவாரத்தின் தற்போதைய நிலையினை ஆய்வாளர்கள் செயற்கைக் கோளின் துணையுடன் ஆராய்ந்து வருகின்றனர்.




அந்தாட்டிக்காவில் ஓசோன் துவாரத்தின் பரப்பு 1980 ஆம் ஆண்டு முதல் கணக்கிடப்பட்டுள்ளது. ஓசோன் துவாரத்தின் பரப்பு ஆகஸ்ட் மாதத்தில் 10 மில்லியன் ச.கி. மீ அளவில் ஆரம்பித்து செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அதிக அளவிற்கு விரிவடைந்து நவம்பர் மாத இறுதியில் குறைய ஆரம்பித்து, டிசம்பர் முதல் வாரத்தில் ஓசோன் துவாரம் முழுமையாக மறைந்து விடுகின்றது. கடந்த பத்தாண்டுகளில் ஓசோன் துவாரத்தின் பரப்பு அதிகபட்ச நிலையில் 25 மில்லியன் ச.கி.மீ ஆக இருந்த நிலைமாறி, 2000 ஆம் ஆண்டில் 28.3 மில்லியன் ச.கி.மீ ஆக அதிகரித்திருந்தது. இந்த பரப்பளவு அவுஸ்ரேலியாவின் பரப்பளவினை போல் மூன்று மடங்காகும். ஆனால் 2002 ஆம் ஆண்டில் இதன் பரப்பளவு வெகுவாகக் குறைந்து 15 மில்லியன் ச.கி.மீ ஆக இருந்தது. இது கடந்த இருபது ஆண்டுகளில் மிகக் குறைந்த பரப்பளவு கொண்ட ஓசோன் துவாரம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஓசோனில் ஏற்பட்டுள்ள துவாரத்தினால் உயிர்ச்சூழலுக்கு பொருத்த மற்ற ஒளிக்கதிர்கள் புவியை வந்தடைகின்றன. இதனால், மனிதனுக்கு பல விதமான நோய்கள் ஏற்படுகின்றது. அதாவது, தோல்ப்புற்று நோய், கண்களில் வெள்ளை உண்டாதல், அதன் மூலம் கண்பார்வை அற்றுப்போதல், மனிதனின் நோய்த் தடுப்பு முறைகளில் தாக்கங்கள் ஏற்படுதல், நோய்த்தடுப்பு, உடல் சக்தி குறைதல் போன்றவையாகும்.




இதனைவிட தாவரங்களின் வளர்ச்சி குன்றுதல், அவற்றின் பலாபலன்கள் குறைதல், மீன் இனம், ஊர்வன ஆகியவற்றின் முட்டைகள் மிக விரைவாக அழிவடைதல், UV கதிர்களின் வீச்சினால் அப்பகுதிகளில் உள்ள மீனின் உணவுகளான பிளான்டன்கள் அழிவடைதல் ஆகியவைகளினால் கடலில் பிடிக்கப்படும் மீன்களின் வளம் குறைவடைந்துள்ளது.

CFC வாயுவும், காபன்டை ஒட்சையிட் வாயுவும் அதிகளவான சக்தியினை கொண்டவையாகும். இந்த வாயுவின் முக்கிய தொழிற்பாடு வெப்பத்தினை சீராக வைத்திருத்தலாகும். இவ்வகையான வாயு ஒன்று பாச்சப்படுதலின் காரணமாக வளிமண்டலத்தின் வெப்பம் அதிகரித்துள்ளது. இதனால் முனைவுப் பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் உயர்வடைந்துள்ளது. காலநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இங்ஙனமாக ஒன்றொடொன்று தொடர்புடைய சுற்றாடல் பிரச்சினைகள் அதிகளவு ஓசோன் படையின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ளது. எவ்விதத்திலும் ஓசோன் படலத்தின் சிதைவின் இறுதிப் பிரதிபலன் பூமியில் வாழும் சகல உயிரினங்களினதும் அழிவாகும்.

ஓசோன் படையானது புவியிற்கும் அதன் உயிரியல் முறைமைக்கும் பாதுகாப்புக் கவசமாகத் தொழிற்படுகின்றது. ஓசோன் வாயுவிற்கு பங்கம் ஏற்படுத்தும் பொருட்களைப் பாவனையில் இருந்து நீக்கிவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, குளிரூட்கள், கொலோன் உற்பத்திக்கு CFC க்கு பதிலாக மாற்றுப் பொருட்களாக ஓசோன் விரும்பத்தக்க HFC (ஹய்ரோ புளோரோக் காபன்), வகைகளைப் பாவித்தல். தெளிபொருளாக ஹய்ரோ காபன் பாவித்தல், கமத்தொழிலுக்கு பாவிக்கப்படும் மெத்தில் போமலிங் பதிலாக வேறு பாவனைகளை மேற்கொள்ளுதல். தீயணைக்கும் கருவிகளில் பயன்படுத்தப்படும் காபன்டைன் ஒட்சைட் போன்ற மாற்றுப் பொருட்களைப் பாவித்தல், வளர்முக நாடுகளில் வெளியேற்றப்படும் CFC உள்ளடங்கலான பொருட்களை இறக்குமதி செய்வதை தடுப்பதற்காக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்றன இன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆய்வு தொடரும்



யாழ்ப்பாணத்தில் சாதி இருக்கிறதா?

**சங்கர், காரைநகர்**

**பதில்:-**

சாதி என்கிற சகதிக்குள்த்தான் யாழ்ப்பாணமே இருக்கிறது.



துமியாரே! இலங்கையில் விரல் விட்டு எண்ணும் பணக்காரர்களில் நானும் ஒருவனாக என்ன செய்ய வேண்டும்?

**கரன், சுழிபுரம்**

**பதில்:-**

தேவைகளை குறைச்சுக்கொண்டே வாங்க கரன்! இலங்கையில் என்ன உலகத்திலயே நீங்கதான் பணக்காரனா இருப்பீங்க. செல்வந்தனா இல்லையான்னு தீர்மானிக்கிறது பணம் இல்லை, திருப்தியான மனம்!







சங்குப்பிட்டிப்பாலத்தின்ட கதை முடிந்து விட்டதாமே! உண்மையா?

**சாரங்கன், பளை**

**பதில்:-**

2010ம் ஆண்டு அந்த பாலத்தை கட்டிய போது ஆச்சரியமாக பார்த்தார்கள். இப்போது ஆபத்தாக பார்க்கிறார்கள். உப்புத் தண்ணீர் அதிகமுள்ள இடம் என்பதால் விரைவாக துருப்பிடித்துள்ளது. அதற்கான பராமரிப்பு வேலைகளை காலத்திற்கு காலம் RDA செய்து வருவது வழமை. இப்போது கொரோனா என்பதால் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் விரைவாக பராமரிப்பு பணிகள் இடம்பெறும் என்றும் கூறுகிறார்கள். பாலத்தின் பிரதான கட்டமைப்புக்கள் கல்வனைசுப்படுத்தப்பட்டுள்ளமையால் பாரிய பாதிப்பு இல்லை என்கிறார்கள். ஊடகங்கள் ஊதிப்பெரிதாக்கியதைப் போல துரு பெரிதாக முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புவோம்.





தென்னை மரங்களை என்ன இடைவெளியில் நட்டால் நல்ல பயன் தரும்?

***கம்சத்வினி,***
***கிண்ணியா***

**பதில்:-**

தென்னைக்கு தேரோட..
வாழைக்கு வண்டியோட...
கரும்புக்கு ஏரோட....
நெல்லுக்கு நண்டோட.....!

என்று இடைவெளி விட்டு பயிர் வளர்க்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி சங்க கால பாடலே உள்ளது. அந்த மரத்தின் உச்ச பயனை பெற போதிய இடைவெளி மிக அவசியம். தேடிப்பெற்ற இடைவெளி அளவீடுகளை பகிர்கிறேன் சகோதரி!

□வேப்பமரம். 15’ × 15’
□பனைமரம். 10’ × 10’
□தேக்கு மரம். 10’ × 10’
□மலைவேம்பு மரம். 10’ × 10’
□சந்தன மரம். 15’ × 15’
□வாழை மரம். 8’ × 8’
□தென்னை மரம். 24’ × 24’
□பப்பாளி மரம். 7’ × 7’
□மாமரம் உயர் ரகம். 30’ × 30’
□மாமரம் சிறிய ரகம். 15’ × 15’
□பலா மரம். 22’ × 22’
□கொய்யா மரம். 14’ × 14’
□மாதுளை மரம். 9’ × 9’
□சப்போட்டா மரம். 24’ × 24’
□முந்திரிகை மரம். 14’ × 14’
□முருங்கை மரம். 12’ × 12’
□நாவல் மரம். 30’ × 30’


Quarantine என்றால்....
14 நாள் தனிமைப்படுத்தலா?
40 நாள் தனிமைப்படுத்தலா?

***ரம்யா, வெள்ளவத்தை***

**பதில்:-**


பொதுவாக தனிமைப்படுத்தலைத்தான் Quarantine என்கிறார்கள். நீங்கள் தேவைக்கேற்ப நாட்களை இணைத்துக் கொள்ளலாம்.

பிளாக் டெத் என்று சொல்ல படுகின்ற பிளேக் எனும் கொள்ளை நோய் ஏற்பட்ட போதே இந்தச் சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. இத்தாலிக்கு வேறு நாட்டில் இருந்து கடல் மார்க்கமாக வரும் கப்பல்கள் தொற்று அபாயத்தை கருத்தில் கொண்டு 40 நாட்கள் கடலில் தங்க வைக்க பட்ட பின்பே அனுமதிக்க பட்டன. 40 என்பதற்கான இத்தாலிய வார்த்தை quaranta இதில் இருந்து நோய் தொற்றுக்கு ஒதுக்கி வைக்கும் நிகழ்வுக்கு பெயர் quarantine என வந்தது. ஆனால் இப்போது பொதுவாக தனிமைப்படுத்தலுக்கு இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது.



திருவள்ளுவர் எந்த மதத்தை சேர்ந்தவர்?

*எவனோ ஒருவன், யாழ்ப்பாணம்*



**பதில்:-**

எங்களைப் பற்றி யாருக்கு வடிவாக தெரிஞ்சிருக்கோ இல்லையோ திருவள்ளுவருக்கு தெரிஞ்சிருக்கு. தான் இந்த மதம் என்றத வெளிக்காட்டினா திருக்குறளை இவங்கள் மத நூலாக்கி முடக்கி விடுவாங்கள் என்டு தெரிஞ்சு தான் எந்த குரளிலும் குறித்த ஒரு தெய்வத்தை குறிப்பிடவில்லை. மதங்களைக் கடந்த மனிதத்திற்கான நூல் திருக்குறள்.


உங்களுக்கு இன்னும் புரியுமாறு சொல்வதென்றால் நீங்கள் எப்படி உங்கள் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லையோ அதுபோல திருவள்ளுவரும் தன் மதத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை.

கொரோனா ஊசி போட்டுட்டீங்களோ? எந்த ஊசி நல்ல ஊசி?

*வர்சினி, வத்தளை*

**பதில்:-**

ஓம் இரண்டு ஊசியும் போட்டாச்சு. உங்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கிற எந்த ஊசியுமே நல்ல ஊசிதான் என்டு மருத்துவத்துறை சொல்லியிருக்கினம். ஆக, அந்த நாட்டு ஊசி இந்த நாட்டு ஊசி என்டு அடிபடாம கிடைக்கிற தடுப்பூசிகளை விரைவாக போட்டுக்கொள்றது தான் புத்திசாலித்தனம்.




*இலக்கியத்தில், இலக்கணத்தில், இதிகாசத்தில், அறிவியலில், ஆன்மீகத்தில், நடந்தவற்றில், நடப்பவற்றில், கற்றவற்றில், கேட்டவற்றில், பார்த்தவற்றில்*
என்று ஐயங்கள் பல எழுந்திருக்கும். பதில் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்விகளாக, பலரும் அறிந்திருக்க வேண்டிய கேள்விகளாக அவை இருந்தால் அந்த கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்.

**பின்வரும் வழிகளில் உங்கள் கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்**

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

# பொக்கைவாய்ப் பற்கள்

ஜெ.கார்த்தி, கரூர்

தினத்தொடர்களின் மிதமிஞ்சிய ஓலங்களால்
பகல்நேர உறக்கத்தைத் தொலைத்த
பொக்கைவாய்க் கிழவிக்குத்
திண்ணைக்கருகில் வளர்ந்தோங்கிய
வேப்பமரத் தென்றல் தாலாட்டுப் பாட முனைந்தது..

தட்டுத் தடுமாறி மரத்தையொட்டி குத்தவைத்த
கிழவியின் தலை மீது
சிறியரக வேப்பங்குச்சிகள் பழுத்துப்போன
சிற்சில இலைகளோடு வீழ ஆரம்பிக்கவே
சற்று முற்றும் திரும்பிப்பார்த்தாள்.
காய்ந்துபோன வேப்பங்குச்சியோடு ததும்பி வந்த
எண்ணங்களை உவமிக்கலானாள்.
எண்பதாண்டுகால நட்புண்டு
வேப்பங்குச்சிக்கும் கிழவிப் பல்லுக்கும்
அடுப்புச் சாம்பல்களும்
செங்காமுட்டிப் பொடிகளும்
இரும்புக்கு நிகர்த்தப்பற்களைப்
பட்டை தீட்டின ஒருகாலத்தில்!
ஆங்காங்கே பல் மேட்டில் சற்று
ஓட்டைகள் துளைக்கவே சட்டென்று
வாழ்நாள் வாடிக்கையாளரானாள்
வேப்பங்குச்சிக்கு!



எத்தனைப் பொங்கல்களில்
எத்தனைக் கரும்புகள்
கிழவியின் பற்களால்
கட்டுக்கட்டாய்க் கட்டுடைக்கப்பட்டன.
எண்ணிக்கை தெரியாத ஆட்டுக்கறியின்
அனைத்துவகை எழும்புகளும்
கிழவியின் பற்களுக்கு அத்துப்படி..
குழாயடிச் சண்டையில்
போட்டிக்கு வரும் வீராங்கனைகளுக்கு
தக்க ஆய்தமும் கூடவே!
எண்பதாண்டு எண்ணங்களை முகிழ்த்தெடுக்கும் நேரத்தில்
பட்டைகள் சிற்சிலவாய் உரிந்து
மரமும் நிர்வாணமாகிக் கொண்டிருந்தது.
அப்போது மெல்ல தன் பொக்கை வாயை
வலது இடதுமாகத் தொட்டுப்பார்த்துப் புன்னகைத்தாள்!




# புதிர் 14
# நம்பினால் நம்பியும் அறிவாளி

**சினமிகா**



தன் முயற்சியில் சற்றும் தளராத “உஜ்ஜயினி” நாட்டு மன்னன் “விக்ரமாதித்தன்”, முருங்கை மரத்திலிருந்த வேதாளத்தை இறக்கி தன் முதுகில் சுமந்து வந்து கொண்டிருந்த போது அவ்வேதாளம் விக்ரமாதித்தனிடம் தான் ஒரு கதையைக் கூறப் போவதாகவும், அதற்கான சரியான விடையை விக்ரமாதித்தன் கூறவேண்டும் என்றும் அவ்வாறு கூறாதவிடத்து தலை வெடித்து சுக்குநூறாகிவிடும் என்று கூறி கதை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு ஊரில் சரண்யன் என்ற மிகப்பெரும் செல்வந்தர் வாழ்ந்து வந்தார். நீண்ட நாட்களாக பிள்ளைப்பேறில்லாமல் தவித்து வந்த அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அக்குழந்தைக்கு நம்பி என்று பெயர் சூட்டி போற்றி வளர்த்தார். பிறப்பிலிருந்தே சற்று மந்தப் புத்தி கொண்ட நம்பியை கல்வி கற்க அவ்வூரிலுள்ள ஒரு குருகுலத்தில் சேர்த்தார். அங்கு சேர்ந்து கல்வி பயின்றும் அவன் சிந்தனைத்திறனில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. இதனால் கவலையடைந்த சரண்யன் தன் மகன் நம்பியை ஒரு ஜோதிடரிடம் அழைத்துச் சென்றார்.


நம்பியின் ஜாதகத்தை ஆராய்ந்த ஜோதிடர் ஒருவர் “நம்பிக்கு கிரக நிலைகள் எதுவும் சரியில்லை, எனவே அவன் வித்யாவனம் எனும் ஊருக்குச் சென்று, அங்கு ஞானேந்திரர் என்பவர் குருகுலத்தில் சேர்ந்து கல்வி பயின்றால், இவன் சில காலத்திற்குப் பின் அறிவிற் சிறந்த மாணவனாக மாறுவான்” எனக் கூறினார். இதைக் கேட்ட சரண்யன், வித்யாவனம் சென்று அங்கு ஞானேந்திரரின் குருகுலத்தில் தன் மகனைச் சேர்த்தார். நம்பியின் கல்வி முனேற்றத்தைப் பற்றி அவ்வப்போது தன்னிடம் வந்து ஆலோசித்து செல்லுமாறு ஞானேந்திரர் நம்பியின் தந்தை சரண்யனிடம் கூறினார்.

இக்குருகுலத்தில் சேர்ந்த பின்பும் நம்பியின் மந்தப் புத்தி மாறவில்லை. அப்போது அக்குருகுலத்தில் பக்கத்து ஊரைச் சேர்ந்த “சுகுமாரன்” என்ற விவசாயியின் மகன் கல்வி கற்க சேர்ந்தான். அவனின் சிறந்த கல்வியாற்றலால் அக்குருகுலத்தின் சிறந்த மாணவன் என அனைவராலும் பாராட்டப்பட்டான். இதைக் கண்ட நம்பி சுகுமாரனுடன் நட்புக் கொள்ள எண்ணினான். ஆனால் சுகுமாரன் அவனிடமிருந்து விலகிச் சென்றான். அப்போது சுகுமாரனுக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டது. தன் தந்தைக்கு கடன் சுமை அதிகமாகிவிட்டதாகவும், அவர் கடனடைக்க அவரு க்கு உதவுவதற்காக தன் கல்வியை நிறுத்திவிட இருப்ப தாக தன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அங்கு தன் மகன் நம்பியைக் காண வந்த சரண்யனிடம், நம்பி இவ்விசயத்தைப் பற்றிக் கூறினான், இதை கேட்ட சரண்யன், சுகுமாரனைத் தன் மகன் போல் எண்ணுவதாகவும், அவன் கடன் பிரச்சனையை தாம் தீர்ப்பதாகவும் கூறினார்.

இதைக் கேட்டு மகிழ்ந்த சுகுமாரன், நம்பிக்கும் அவன் தந்தைக்கும் நன்றி கூறினான். மேலும் இனி நம்பி அறிவாற்றலிலும், கல்வியிலும் சிறந்து விளங்க தான் உதவுவதாக நம்பிக்கு உறுதியளித்தான். சுகுமாரன் கூறிய படியே நம்பிக்கு கல்வியில் உதவியதால், நம்பியும் சில காலத்திலேயே அறிவிற்ச் சிறந்த மாணவனாக மாறினான். இதைக் கண்டு ஆச்சரியம் அடைந்த குரு ஞானேந்திரர் நம்பியின் அறிவாற்றலை சோதிக்க எண்ணி நம்பியை அழைத்து புதிரொன்றைத் தொடுத்தார்.

மேலுள்ள படத்தில் 18குச்சிகளைப் பயன்படுத்தி முக்கோணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஐந்து முக்கோணங்கள் இருக்கும் வகையில் நான்கு குச்சிகளை அகற்ற வேண்டும்.

குருவின் கேள்விக்கு சரியான பதிழித்த நம்பியை பாராட்டி “என்னால் செய்ய முடியாததை உன்னால் மட்டும் எப்படி சாதிக்க முடிந்தது?” என்று சுகுமாரனிடம் கேட்டார். அதற்கு அவன் “மற்றவர் நம்பியை முட்டாள் என்று கேலி மட்டுமே செய்ததாகவும், ஆனால் தான் நம்பியிடம் அவன் ஒரு சிறந்த அறிவாளி என்று பாராட்டி ஊக்கப்படுத்தியதால், அவனே உற்சாகத்துடன் கல்வி பயில ஆரம்பித்து சிறந்த மாணவனாக மாறியதாக” சுகுமாரன் கூறினான்.



இதைக் கேட்டு மகிழ்ந்த ஞானேந்திரர் “இதைப் பற்றி நம்பியின் தந்தை கேள்விப்பட்டால் அவர் மிகவும் மகிழ்ந்து உனக்கு மேலும் பல உதவிகள் செய்வார்” என்று கூறினார். தனக்கு மேற்கொண்டு உதவிகள் எதுவும் தேவையில்லை என்றும், நம்பியின் தந்தை தன் தந்தைக்கு செய்த உதவிக்கு இதைக் கைமாறாக கருதுவதாக கூறினான்.

இவ்விடத்தில் கதை கூறுவதை நிறுத்தி, விக்ரமாதித்தன் முதுகில் அமர்ந்திருந்த வேதாளம், “நம்பி குருவின் புதிருக்கு என்ன பதில் கூறியிருப்பான்?” என்று விக்ரமாதித்தனிடம் கேள்வி கேட்டது. சற்று நேரத்தில் யோசிக்க தொடங்கினான் விக்ரமாதித்தன்.

தூமி அன்பர்களே பதிலைக் கண்டுபிடிக்க நீங்களும் மன்னருக்கு உதவிடுங்கள். உமது பதிலை எமக்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 13 – விடைகள்

இருவரும் ஆளுக்கு 100 மாபிள்கள் வீதம் வைத்து விளையாட்டை ஆரம்பித்தார்கள். விளையாட்டு முடியும் போது டச்சு 40 மாபிள்களும் ஸ்பைக் 160 மாபிள்களும் வைத்திருந்தனர்.

## மிகக் கொடூர பறவைகளை வளர்த்த ஆதிமனிதர்கள்



வடக்கு அவுஸ்திரேலியா மற்றும் நியூ கினியா ஆகிய பகுதிகளில் காணப்படும் காசாவரி (ஊயளளழறயசல) எனும் மனிதர்களை கொல்லக்கூடிய ஆக்ரோ‘மான பறவைகளை சுமார் 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள் கோழிகளை போல வளர்த்ததாக அமெரிக்காவின் பென் ஸ்டேட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவுத்துள்ளனர்.

நியூ கினியாவில் ஆதிமனிதர்களின் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட காசாவரி முட்டை ஓடுகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளதாக தெரிவுத்துள்ளனர். முட்டை ஓடுகளில் காணப்படும் தீ அடையாளங்கள் அவை வேக வைக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுகின்றன. மற்றும் சில பிந்திய கருக்கட்டப்பட்ட முட்டைகள் குஞ்சு பொறிப்பதற்க்காக சேகரிக்கப்பட்டுள்ளன. காசாவரி குஞ்சுகள் இறைச்சி மற்றும் இறகுகளுக்காக வளர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றும் காசாவரி இறகுகள் சம்பிரதாய ஆடைகளுக்காக சேகரிக்கப்படுவதோடு காசாவரி இறைச்சி நியுகினியாவின் சுவைகளின் கிரீடமாக கருதப்பட்டது.

# கிராமத்து இளைஞர்கள்

அ.வியாசன்
சுன்னாகம்

இடைமாற்றத்தினூடாகச் செல்லும் ஒரு குழுவென்னும் பரந்த எண்ணக்கருவினுள் சமூகங்களிலும், கலாசாரங்களிலும் இளைஞர் குறித்த வரைவிலக்கணம் பெரிதும் மாறுபடுகின்றது. இதற்கான காரணம் குறித்ததொரு சமூக, பொருளாதார மற்றும் கலாசாரச் சூழமைவுகளில் இளைஞர்களின் அனுபவங்களையும், சூழ்நிலைகளையும் காண்பிக்கும் பல்வேறு அடையாளக்குறிகள் மற்றும் பண்புகளைப் பயன்படுத்தி அவர்களை ஒரு வகைப்பிரிவாக இனங்காணக்கூடியதாக இருப்பதேயாகும்.

அனேகமான வரைவிலக்கணங்கள் ஒரு குறிப்பிட்ட வயதுக் குழுவின் பொதுவான அனுபவங்கள் மற்றும் பாத்திர எதிர்பார்ப்புகள் என்பவற்றினடிப்படையில் அவர்களை வகைப்படுத்தும், பரந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு



மாதிரியைப் பயன்படுத்துகின்றன. இதன் பிரகாரம், அனைத்துலக வரைவிலக்கணம் ஐ.நா முறைமையின் கீழ் 15 – 24 வயதுக்குழுவை இளைஞர், யுவதிகளாகக் குறிப்பிடுகையில், பல்வேறு நாடுகள் தமது சொந்த, தனிச்சிறப்பான சூழமைவுகளைக் கருத்திற்கொண்டு வயதுக்குழுக்களில் சிறிய வித்தியாசங்களை ஏற்றுக் கொள்கின்றன. இந்தவகைப்படுத்தல் வயதுக் குழுக்களினுள் நிலவும் பல்வகைமைகளைக் கருத்தில் கொள்ளாவிடினும், அது இளைஞர்களையும், சமூகத்தில் அவர்களின் இடத்தையும் இனங்காணுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழியாக விளங்குகின்றது.



இப்பின்னணியில், இலங்கையின் தேசிய இளைஞர் கொள்கை இளைஞர்களை இலங்கையின் சூழமைவில் தங்கி வாழும் சிறுவர் நிலையிலிருந்து சுதந்திரமான வளர்ந்தோர்நிலைக்கு இடமாற்றம் பெறும் தன்மையைக் கருத்திற்கொண்டு 15 - 29 வயதினர் என வரைவிலக்கணம் செய்கின்றது.

இளைஞர்கள், யுவதிகள் ஒரு சமூகவகைப் பிரிவினர் என்ற வகையில் அவர்களின் உள்ளார்ந்த சிக்கல் தன்மைகளை அது அங்கீகரிப்பதோடு, இளைஞர்களின் சமூக, பொருளாதார, நகர்ப்புற, கிராமிய, வேலை வாய்ப்புநிலைகள், இனத்துவ வாழ்க்கை நெறியின் போது மொழி, மத மற்றும் கலாசாரக் கண்ணோட்டங்களில் ஏற்படும் பன்முக அனுபவங்கள் குறித்தும் பூரணமாக அறியப்பட வேண்டும்.

இப்போதைய தேவை, திறமைகளுடன் கூடிய நல்ல இளைஞர்கள். இளைய சமுதாயத்தை ஆய்வு செய்யும் போது வெறுமனே அவர்களை குற்றம் சாட்டுவதை தவிர்த்து, அவர்களிடம் எதை எதிர்பார்க்கிறோம் என்பதை தெளிவுபடுத்தல் வேண்டும். மேலும் அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருதல் வேண்டும் என்ற நோக்கில் கிராமத்து இளைஞர்கள் என்ற தலைப்பில் ஆராயப்படுகிறது.

கிராமங்களிலே இளைஞர்களுக்கு என சிறப்பாக இளைஞர் கழங்கள், விளையாட்டுக்கழங்கள் காணப்படுவதை கண்டு கொள்ளலாம். ஆனாலும் இங்கு கிராமத்தின்



முக்கிய மையமாக திகழும் சனசமூக நிலையத்தினை இளைஞர்கள் பொறுப்பேற்று நடத்துகின்றனர். அதாவது வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சுன்னாகம் மேற்கு அறிஞர் ஐயன்னா சமூக நிலையத்தினை இளைஞர்கள் நிர்வாகிக்கின்றனர்.

இன்று இளைஞர்கள் சனசமூக நிலையங்களை அரட்டை அடிக்கப் பயன்படுத்துகின்றனர் என்ற விமர்சனங்களும் உண்டு. இவ் சனசமூக நிலையத்தில் 24 வயதிற்கும் 30 வயதுதிற்குட்ட இளைஞர்கள் சேவை செய்கின்றனர். இவர்களின் நிர்வாகத்தின் கீழ் வாசிகசாலை, முன்பள்ளி, விளையாட்டுக்கழகமும் உள்ளன. தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக உறுப்பினர் என மொத்தமாக 12 இளைஞர்களையும் நடுத்தர வயதினை மிக்க பொருளாளரையும் கொண்டு இயங்குகின்றனர்.

இவர்கள் ஒவ்வொரு மாதமும் நிர்வாக சபை கூட்டத்தினை கூட்டி நிறை குறைகளை விவாதிப்பார்கள். பெரியோர்களை கொண்டு இயங்குகின்ற சனசமூக நிலையங்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளுவது அரிதாக காணப்படுகிறது. இவ் சனசமூக நிலையத்தின் நுழைவாயில் முகப்பு வர்ணம் பூசுதல், மின்சார இணைப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிலையத்தினை அழகு படுத்துகின்ற செயற்பாடுகளை தமது

தனிப்பட்ட வேலைப்பளுவுக்கு அப்பால் இரவு, பகல் என பாராமல் தமது சேவைகளை மேற்கொள்ளுவதை அவதானிக்கமுடிகிறது. இவர்களுக்கு ஆதரவாக கிராமத்து செல்வந்தர்களும் திகழ்கின்றனர்.



சனசமூக நிலைய உறுப்பினர்களும், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராமத்து மக்களுடன் இனைந்து பண்பாட்டு, கலாசார நிகழ்வுகளை முன்பள்ளி குழந்தைகளை மகிழ்வூட்டும் நிகழ்வுகளாக பொங்கல் விழா, முன்பள்ளியிலிருந்து தரம் ஒன்றிற்கு செல்லும் மாணவர்களுக்கான வழியனுப்பு விழா, முன்பள்ளியில் புதிதாக இணைந்த மாணவர்களுக்கான கால்கோல் விழா போன்ற விழாக்களையும் நடாத்தினர். மேலும் விளையாட்டுப் போட்டி, உழவர் சந்தை, நவராத்திரி பூசைகள் என்பவற்றையும் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். முன்பள்ளி மாணவர்களுக்கு உதவி திட்டங்களை வழங்குகின்றனர். மேலும் கிராமத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் உண்மையிலே வரவேற்கத்தக்கவை. இக்கட்டுரையின் நோக்கமானது அவ் இளைஞர்களின் பெருமைக்காக மட்டுமின்றி யாழ்ப்பாண சமூகம் என்பது கலாச்சாரம், பண்பாடு மேம்பட்ட நிலையில் இருந்த நிலைமாறி இன்று அதீத போதைவஸ்து பாவனையும், கலாச்சார சீரழிவும் நடைபெறுகின்ற இடமாக மாறிக் கொண்டுவருகின்றது. இளைஞர்களும் திசைமாறிச் செல்கின்றனர் என்ற குற்றச்சாட்டு காணப்படுவதனால் இவ்வாறன இளைஞர் மத்தியிலும் சமூக பொறுப்பு வாய்ந்த இளைஞர்களும் காணப்படுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது எனலாம்.

சனசமூகநிலையம் என்பது சமூக அபிவிருத்திக்கும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்குமான ஒரு அமைப்பாகும். அதன் செயற்பாடானது இளையோரை நல்வழிப்படுத்துவதற்கும் வருங் கால தலைமுறையினரை ஒழுக்க சீலர்களாக ஆக்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும். எனவே முன் மாதிரியான நிறுவனங்களாக சனசமூக நிலையங்கள் செயற்படவேண்டும்.






பவி

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் 3 ஆம் இலக்கமிடப்பட்ட வீடு அது! வெளித்தோற்றத்திற்கு ஏனைய வீடுகளை போன்றே ஆரவாரமற்ற அமைதியுடன் தோற்றமளித்தது. ஆனால் சாத்தப்பட்ட கதவுகளின் பின்னே ஒரு பிரளயமே நடந்தேறியிருந்தது.

அவள் வாழ் நாளுக்குமாய் இறுகப்பற்றியிருந்த கரங்கள், பிடி தளர்த்தி அவளை நிர்கதியாக விட்டு சென்றிருந்தன.

ஆள் அரவமற்ற அந்த அறையில் அவளின் விசும்பல் மட்டும் ஈன ஸ்வரத்தில் ஒலித்துக்



கொண்டிருந்தது. ஆற்றி தேற்ற அவளுக்காக அங்கு யாரும் இல்லை.

**'தனியாக தவிக்கின்றேன்**
**துணை வேண்டாம் அன்பே போ**
**பிணமாக நடக்கின்றேன்**
**உயிர் வேண்டாம் தூரம் போ'**

அவனுக்கான அத்தியாயம் அவள் வாழ்க்கை புத்தகத்தில் தொடங்க முன்னும் அவள் உரிமை கோர உற்றார் உறவினர் யாரும் இருந்ததில்லை. யாரும் இல்லையே என அவள் குறைப்பட்டதுமில்லை. அப்படியான உறவுகளை எதிர்பார்த்து ஏங்கியதும் இல்லை.

**'சொந்தம் எதுவுமில்ல**
**அத சொல்ல தெரியவில்ல'**

அவள் நினைவு தெரிந்ததிலிருந்து தனியாகவே இருந்திருக்கிறாள். தனிமையிலேயே வாழ்ந்திருக்கிறாள். ஆனால் அந்த தனிமை அவளை ஒருபோதும் நிலைகுலைய செய்ததில்லை. அனாதரவாய் உணர வைத்ததில்லை. அத்தனிமையை அவள் விரும்பினாள். அதன் சுகானுபவத்தை தினம் தினம் சுகித்தாள். தனக்கான சுதந்திர நொடிகளாக அம்மணித்துளிகளை செலவழித்தாள். அப்பொழுதுகளிலேயே சுயத்தை பூரணமாய் வெளிப்படுத்தினாள்.

**'உன்னோடு மட்டும்தான்**
**என் நேரம் எனது**
**உன்னோடு மட்டும்தான்**
**மெய் பேசும் மனது**
**என் இனிய தனிமையே!'**

இவ்வாறாக தனிமையிலேயே இனிமை கண்டுகொண்டு இருந்தவளை அவள் உற்ற நண்பனிடம் இருந்து பிரித்த கொடும்பாதகன் அவன்!

***'ஒரு சிலர் என்னை நெருங்க என்னிடம் பேச தொடங்க***
***சிறு ஊடல் கொண்டு***
***நீங்கி போகின்றாய்'***

அவளுடைய குறுகிய வட்டத்திற்குள் அவள் அனுமதியின்றி நுழைந்தான். தனிமையின் முடிச்சிலிருந்து அவளை கட்டவிழ்த்து, தனித்திருத்தல் சுகம் என மதி கெட்டு இருந்தவளை தன் மனதில் தங்க வைத்து உண்மையான சுகானுபவத்தை காட்டினான்.

அவள் மேல் அவளுக்கே நம்பிக்கை ஊட்டினான். பல சமயங்களில் அவளை வெட்கப்படுத்தினான் பூரிப்படைய செய்தான் மெய் சிலிர்க்க வைத்தான். சுயம் சுற்றம் யாவும் மறந்து அவனே சரணாகதி என அவள் மனதில் சிம்மாசனம் போட்டமர்ந்தான்.

***'என்னை நான் பெண்ணாக***
***எப்பொழுதுமே உணரல***
***உன்னாலே பெண் ஆனேன்***
***எப்படி என தெரியல'***

அவள் உயிரில் வேரூன்றியவன் அவன்! இன்று ஏனோ கொடுஞ்சொல் கூறி விட்டு போய்விட்டான். அவன் மீண்டும் வரக்கூடும் வராமலும் இருக்கக்கூடும். எது எவ்வாறெனினும் இந்தப் பொழுது, இம்மணித்துளி, இந்நொடி அவன் அவளோடு இல்லை.

***'மூங்கில் காட்டில் தீ விழும் பொழுது***
***மூங்கில் காடென்று ஆயினள் மாது'***

மீண்டும் தனிமை அவள் அருகே அவளை அணைக்க வேண்டி காத்திருந்தது. ஆனால் இப்போது அந்த தனிமை அவளுக்கு கதகதப்பு அளிக்கவில்லை எரிதழலாய் சுட்டது. சுகமாய் அன்றி சூனியமாய் இருந்தது. அவளுக்கு ஆறுதலாய் அன்றி அருவருப்பை ஊட்டியது. உற்ற நண்பன் கொடிய எதிரியாகி அவள் இருதயத்தில் வேலை பாய்ச்சினான். அவன் பற்றிய நினைவலைகளை ஆர்ப்பரிக்க செய்யும் சுழிக்காற்றாய் மாறினான். அவனின் அருகாமைக்காக அவளை ஏங்க செய்தான்.

***'தனிமை என்னை எரிக்குதே***
***உன் நினைவில் வதைக்குதே'***

தலையணையை தாய்மடியாய் பற்றிக்கொண்டாள். தகிக்கும் நெஞ்சுக்கு தாலாட்டு தேவைப்பட்டது. இதயத்தின் கனத்தை குறைக்க தேற்றரவு கூறும் குரல் தேவைப்பட்டது. இயர்போனை காதில் சொருகி play list ஐ போனில் தட்டி விட்டாள்.



அவள் மனசாட்சியின் குரல் காதுக்குள் நுழைந்து மூளையில் எதிரொலித்தது.

//எவனோ ஒருவன் வாசிக்கிறான்
இருட்டில் இருந்து நான் யாசிக்கிறேன்//

அவளும் யாசிக்க தொடங்கினாள் ஏ.ஆர். ரஹ்மான் வாசித்ததை....

//இன்னிசை மட்டும்
இல்லையென்றால் நான்
என்றோ என்றோ இறந்திருப்பேன்//

தான் மறைந்தாலும் தன் இசையாலும் குரலாலும் பலரையும் இறக்கவிடாமல் தேற்றிக் கொண்டிருந்தார் சுவர்ண லதா.

இசையை நொதியம் எனக் கொள்ளலாம்.
உயிரங்கிகளில் நொதியங்களின் பங்கு இன்றியமையாதது. நொதியங்கள் உயிரியல் ஊக்கிகளாகும். அவை உயிர் இரசாயன தாக்கங்களின் ஏவற்சக்தியை குறைத்து தாக்கவீதத்தை அதிகரிக்கும். அவ்வாறே இசையும் மனிதர்களின் உணர்வுகளை அடக்கி கொள்ளும் தாங்கு திறனை (Threshold) குறைத்து அவற்றை பன்மடங்காக வெளிப்படுத்த செய்யும்.
நம் சந்தோஷம், உற்சாகம், வேகம், பூரிப்பு, நெகிழ்ச்சி, வெட்கம், சோகம், ஆற்றாமை, அழுகை என எத்தனையோ உணர்ச்சிகளை பன்மடங்காக பெருக்கிவிடும்.

'மொழி தெரியா பாடலிலும்
அர்த்தங்கள் இன்று புரிகிறதே'

இவ்விசை எனும் நொதியத்தின் துணைக்காரணி மொழி ஆகும். துணைக்காரணி என்பது குறித்த சில நொதியங்களின் ஊக்கற் தொழிற்பாட்டிற்கு அவசியமான கூறுகள் ஆகும்.

மொழி கடந்த இசை சந்தோஷ சாரலின் வெளிப்பாடாய் இருக்கும் அதேவேளை மொழியுடன் பிணைந்த இசை ஆற்றாமைக்கான தேற்றரவு!

"When you're happy you enjoy the music, but when you're sad you understand the lyrics" - Frank Ocean

அவளிற்கும் தேற்றரவாய்,

'இசை வந்த பாதை வழி
தமிழ் மெல்ல நுழைந்தது'



//புல்லாங்குழலே பூங்குழலே
நீயும் நானும் ஒரு ஜாதி
உள்ளே உறங்கும் ஏக்கத்திலே
உனக்கும் எனக்கும் சரிபாதி//

அவளின் மனதினுள் உள்ள ஏக்கமே புல்லாங்குழல் ஓசையாக வெளிவருவதை உணர்கிறாள். தன் மனதினுள்ள ஆறா வடு போன்றே புல்லாங்குழலும் சோகத்தில் உள்ளதாக பாவிக்கிறாள்.

இருந்தாலும் புல்லாங்குழல் அதன் வேதனையை அதன் துளையாகிய கண்களால் இசையழுகையாக்கி காற்றில் தவழ விட்டு சாந்தமடைகின்றது. ஆனால் இவளுக்கோ அத்தனை கண்களும் இல்லை. இருக்கின்ற இரு கண்களிலும் கண்ணீரும் இல்லை. மனபாரத்தை இறக்கி வைக்க வழியுமில்லை.

**//அந்த குழலை போல்<br>அழுவதற்கு அத்தனை கண்கள்<br>எனக்கில்லையே//**

அவள் வேதனையை விலக்க வழி இல்லாவிடினும், வேதனையில் பங்கெடுக்க இசையும் வரிகளும் இருந்ததால் அவளால் தன் நிகழ்காலம் மறந்து இறந்த காலத்தை அசை போட முடிந்தது. சோக நோய்க்கு சிறந்த சிகிச்சையாகவும் இசை இருந்தது.

**//கண்களை வருடும் தேனிசையில்~ என்<br>காலம் கவலை மறந்திருப்பேன்...<br>எந்தன் சோகம் தீர்வதற்கு<br>இதுபோல் மருந்து பிரிதில்லையே//**

மனத்தின் ரணத்திற்கு மயிலிறகாக, மீண்டும் நினைவலைகள் கரையாகிய அவனை தழுவிக்கொள்கின்றன... அவனும் என்னைப் போன்றே உறங்காமல் விடிய விடிய என்னைப் பற்றியே யோசித்து கொண்டிருப்பானா?

**//உறக்கம் இல்லா முன்னிரவில்<br>என் உள்மனதில் ஒரு மாறுதலா//**

நடுநிசியில் தான் இன்றி நான் ஏங்கக்கூடும் தனிமை என்னை வதைக்ககூடும் என எண்ணி அவன் அனுப்பும் செய்திகளா இந்த பாடல் வரிகள்?

**//இரக்கம் இல்லா இரவுகளில்<br>இது எவனோ அனுப்பும் ஆறுதலா//**

ஆனால் எப்போதும் அவன் தோள் வளைவில் இருந்தபடி அவள் கேட்கும் சிறுபிள்ளை தனமான சந்தேகங்களை நிவர்த்திக்க கூட இருக்கும் அவன், இன்று அவளுடன் இல்லை........

**//கேட்டு கேட்டு நான் கிறங்குகிறேன்<br>கேட்பதை எவனோ<br>அறியவில்லை....//**



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| | | 10 | | | | 11 | |
| 12 | 13 | | | | 14 | | |
| 15 | | | 16 | 17 | | 18 | |
| | | | | 19 | | | |
| 20 | | 21 | | | | | |
| 22 | | | | | 23 | | |




சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- சந்தத் தமிழால் முருகனை பாடியவர்
8- இறைவன் (திரும்பி)
9- இனிப்பு வகை ஒன்று
10- பகலில் கண் தெரியா பறவை
11- உடலின் ஒரு உறுப்பு
12- இலங்கையில் சங்கமித்தை வந்து இறங்கியதாக சொல்லப்படும் இடம் (குழம்பி)
15- சீதைக்காக இராமன் தேடிப்போன விலங்கு (திரும்பி)
16- பனையோலையில் செய்வது (திரும்பி)
19- உயரம் குன்றிய மனிதன் (குழம்பி)
21- பஞ்சாமிர்த்ததிற்கு புகழ் பெற்ற இடம்
22- பாத்திரம்
23- மாமரத்தின் இளந்தாவரம்

## மேலிருந்து கீழ்

1- ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவர்
2- இளமைப் பருவ இம்சைகளில் ஒன்று (மேலிருந்து கீழ்)
3- ஒரு எழுத்து முறை
4- சரித்திரம் (குழம்பி)
5- பசுவின் பெண் கன்று
6- அன்பு (குழம்பி)
7- கற்பார் - எதிர்ச்சொல் (திரும்பி)
10- மரம் ஒன்று
13- ஒரு மேளகர்த்தா இராகம்
14- வள்ளம்
17- வயல்
18- திருடன்
20- தோழி (திரும்பி)
21- கல்

## குறுக்கெழுத்துப்போட்டி - 30 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 வே | 3 கா | ன | ந் | 4 த | 5 ர் | |
| 6 பு | த | ன் | | | 7 ச | ந் | 8 தி |
| 9 லா | ம் | ப | 10 க | | 11 ம் | க | அ |
| ன | | | 12 லி | 13 ச | ஞ் | த | ப |
| ந் | | 14 மா | | க் | | 15 தி | தி |
| 16 த | 17 லை | | 18 ம் | க | தி | அ | |
| 19 ர் | ட | 20 வே | | ர | | 21 று | 22 ம |
| | 23 க | ளை | | ம் | | பூ | டு |

நீர் மாசுபடுத்தப்படுத்தலுக்கான ஒரு சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



1986ல் சுவிற்சர்லாந்தில் உள்ள பேசல் நகரில் இரசாயன களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியின் போது 30 தொன் இரசாயனங்கள் உட்பட பீடை நாசினிகள், பாதரசத்தினைக்கொண்ட சேதனப் பொருட்கள், ஏனைய இரசாயனங்கள் என்பன றைன் நதிக்கு கழுவிச் செல்லப்பட்டன. இந்நதியிலிருந்து பல நகரங்களிற்கு நீரைப் பெறும் நிலையங்கள் மூடப்பட்டமையினால் இந்நதியில் தமது பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தங்கியிருந்த சனத்தொகை பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியது. நதியில் இரசாயனங்கள் விடுவிக்கப்பட்டமையினால் அரை மில்லியனிற்கும் அதிகமான மீன்கள் இறந்து போனதாக மதிப்பிடப்பட்டது.

சீனாவின் ஜிலின் மாகாணத்தில் 2005 நவம்பரில் இரசாயன தொழிற்சாலையொன்றில் பாரிய வெடி விபத்து ஏற்பட்டமையினால்,

# 21 ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய 100 தொன் பென்சீன், நைட்ரோ பென்சீன் என்பன சொங்குவா ஆற்றை அடைந்தன. நீரில் அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு அளவை விட 108 மடங்கு பென்சீனின் செறிவு அதிகரித்தது. இதனால் இந்நதியிலிருந்து நீரைப் பெற்றுக் கொண்ட ஹார்பின் நகரில் வாழ்ந்த நான்கு மில்லியன் மக்களிற்கு ஆறு நாட்களிற்கு நீர் வழங்கல் தடைப்பட்டது. இந்நிகழ்வின் காரணமாக சீனா ரசியாவிடம் மன்னிப்புக் கோரியது. ஏனெனில் மாசடைந்த இந்நதி சைபீரியா ஊடாக பாய்கின்றது.



வாகனங்களிலிருந்து வெளியேறும் வாயுக்களின் மூலம் காபன் மொனொக்சைட், ஓசோன் என்பன பிரிகையடைவதற்கு உதவும் எரிபொருள் ஒட்சிசனேற்றிகள் (fuel oxygenates) என அழைக்கப்படும்



இரசயானங்களை அறிமுகப்படுத்திய போது பிரச்சினைகள் எழுந்தன. ஒட்சிசனேற்றிகள் புற்றுநோயைத் தூண்டுவனவாகும். இவை குழாய்கள், நிலத்தடி சேமிப்புத் தாங்கிகளிலிருந்து வெளியேறி நிலத்தடி நீரை மாசடையச் செய்தன. வளி மண்டல மாசடைதலைக் குறைப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இரசாயனங்கள் நிலத்தடி நீரை மாசடையச் செய்தமைக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

60 வருடங்களிற்கு முன்னர் அணுகுண்டைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட யுரேனியம், ஏனைய அணுப்பொருட்கள் என்பன நியுயோர்க் இன் நயாக்ரா மாநிலத்திலுள்ள வீட்டுக் கிணறுகளின் நீரில் கதிர் வீச்சுப்பொருட்கள் சேர வழியேற்படுத்தியது. உண்மையில் புற்றுநோய் ஏற்படுவதற்கு



காரணமான இச்செயலை எதிர்த்து நட்ட ஈட்டினைச் செலுத்துமாறு உள்ளூர் மக்களால் அரசிற்கெதிராக 200 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சில முறைப்பாட்டாளர்களிற்கு நட்ட ஈட்டினை செலுத்துமாறு நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்திருந்தது.

1996 இல் கலிபோர்னியாவிலுள்ள ஹிங்க்லே என்னும் இடத்தில் புற்றுநோயைத் தூண்டக் கூடிய Hexavalent குரோமியம் நிலத்தடி நீருடன் சேருவதற்குக் காரணமான மிகப் பெரும் நிறுவனத்திற்கெதிராக




சட்ட வல்லுனரொருவரின் இலிகிதராக கடமையாற்றிய எரின் புறோக்கோவிச் என்ற பெண்ணொருவர் தனியொருவராக நீதிமன்றம் சென்றார். இதன் விளைவாக அந்நிறுவனம் குரோமியத்தினால் ஆரோக்கியம் பாதிக்கப்பட்ட 654 பேருக்கு 333 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்ட ஈடாகச்செலுத்த வேண்டியேற்பட்டது.

2008 ஜனவரியில் நியுயோர்க் மாநிலத்தில் என்டிகொட் இல் முன்னர் அமைந்திருந்த ஐ.பி.எம்



தொழிற்சாலை ட்றைகுளோரோ எதிலீன், டெட்ராகுளோரோ எதிலீன் உள்ளடங்கலாக இரசாயனக் கழிவுகளை நீரில் விடுவித்தமைக்கு எதிராக அதற்கு அருகில் வசித்த மக்கள் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இவ்விரசாயனங்கள் பிறப்புக் குறைபாடுகளையும், மனிதர்களில் புற்று நோயையும் ஏற்படுத்தக் கூடியவையென அறியப்பட்டுள்ளது. ஜரோப்பிய நீர் நாய்கள், கனடாவின் காடுகளில் நில நீர் விலங்குகள் (Beaver) என்பன குறைந்தமை, ஐக்கிய அமெரிக்காவில் நீர்க் கோழிகள் இறந்தமை, பிரித்தானிய நதிகளில் விலாங்கு மீன்கள் (Eel)அரிதாகியமை என்பன நீர் வாழ் சூழல் மாசடைந்தமையுடன் தொடர்புள்ளவையாகும்.

இங்கு இலங்கையிலும் கண்ணைக் கவர்ந்த நீர் நிலையொன்று காலம் செல்ல துர்மணம் வீசும், கண்ணை உறுத்தும் மோசமானதொரு நீர் நிலையாக மனித நடவடிக்கைகளினால் மாறியமைக்கு பேரைவாவி சிறந்ததொரு உதாரணமாகும். 500 வருடங்களிற்கு முன்னர் இராணுவ நோக்கங்களிற்காக இந்த ஏரி போர்த்துக்கீசரினால் உருவாக்கப்பட்டதாகும். இதேவேளை ஒல்லாந்தர் இவ்வாவியை நீர்கொழும்பு, பாணந்துறை ஆகிய இடங்களிற்கான வாய்க்கால் போக்குவரத்து வலையமைப்பின் மத்திய நிலையமாக மாற்றினர். பிரித்தானிய சீமான்களால் விருந்துபசாரங்களை நடாத்துவதற்கு வாவியின் கரை தெரிவு செய்யப்படும் அளவிற்கு பேரை வாவி அழகுற்று விளங்கியது. 1815ம் ஆண்டில் நெப்போலியனின் வீழ்ச்சியை பிரித்தானிய ஆட்சியாளர்கள் பேரை வாவியிலேயே கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த ஏரியின் உயிரின வாழ்க்கையைப் பொறுத்த வரை மிகவும் பிரசித்தி பெற்ற பிரித்தானிய தாவரவியலாளரான ட்ரைமென் அவர்கள் 1879 இல் இந்த வாவியிலுள்ள நீர் வாழ் தாவரங்கள் தொடர்பான ஒழுங்கு முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு, அவ்வுயிரினங்கள் அடங்கிய பட்டியலொன்றை வெளியிட்டார். எனவே அச்சமயத்தில் இந்நீர்நிலை மிகவும் ஆரோக்கியமானதொன்றாக விளங்கியமைக்கான சான்றாக இது விளங்குகின்றது. ஆனால் இருபது ஆண்டுகளின் பின்னர் இந்த வாவியின் கரைகளில் சட்ட



விரோதமாக மக்கள் குடியேறியத் தொடங்கியமையால் வாவி மாசடையத் தொடங்கியது. மனித கழிவுகள் இவ்வாவியை அடைந்தன. தொழிற்சாலைகளின் கழிவுகள் இவ்வாவியை அடையத் தொடங்கின. வாகனங்கள் திருத்தும் இடங்கள் வாகன சேவை நிலையங்கள் என்பனவற்றிலிருந்து எண்ணெய்கள் நேரடியாக வாவியை அடைந்தன. காலம் செல்ல செல்ல வாவியை அடைந்த சேதனக் கழிவுகளின் அளவு சடுதியாக அதிகரித்தது. இவை சிதைவடைந்து, வாவி நீரில் தாவரப் போசணைசத்துக்களின் செறிவு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதன் விளைவாக அல்காக்களின் வளர்ச்சி அபரிதமாகியது. இவற்றிற் சில அதி நச்சுத்தனமையான பொருட்களை உற்பத்தி செய்யும் இயல்பைக் கொண்டிருந்தன.

மேலும், அல்கா உயிர்த் திணிவுகள் படியிறக்கமடைவதால், நீரில் ஒட்சிசனின் செறிவைக் குறைக்கும். இதனால், துர்மணம் வீசும். ஐதரசன் சல்பைட்டும், ஏனைய ஆபத்தான விளைபொருட்களும் உருவாக வழிவகுக்கும். இவையனைத்தும் ஒன்று சேர்வதனால், பேரை வாவியில் அடிக்கடி மீன்கள் கொல்லப்படுகின்றன. மிக அழகான வாவியொன்று மனிதர்களினால் அழிக்கப்பட்டுள்ளது.இவ்வாறாக பல்வேறு நீர் மாசடைதல் சம்பவங்களை எடுத்துக்கூறலாம். நெடுந்தூ ரமில்லை சில வருடங்களுக்கு முன் சுண்ணாகம் நிலத்தடி நீர்ப்பிரச்சினை என்னவாயிற்று? இன்று யாழ் மாகரில் தூர்வாறப்படும் குளங்களின் நிலைக்கு காரணம் என்ன?

ஆராய்வோம்.....

## அணில் சேகரித்த 160 கிலோ வரல்நட்



அமெரிக்காவின் வடக்கு டொகோட்டோ மாகாணத்தை சேர்ந்தவர் பிஸ்ஸர். இவரது வீடு வால்நட் மரங்களால் சூழப்பட்டது. இவரது பழைய கார் எங்கு நிறுத்தப்பட்டாலும் அதன் அடில் வால்நட் குவியாலாக காணப்படுவது வழக்கம். சமீபத்தில், நான்கு நாட்கள் வெளியூர் சென்ற பிஸ்ஸர் வீடு திரும்பிய போது கார் என்ஜின் உட்பட பல இடங்களில் வால்நட்கள் சிதறிக் காணப்பட்டன. இதனை செய்தது யார் என பிஸ்ஸர் துப்பறிந்த போது ஒரு சிவப்பு நிற அணில், குளிர் கால சேமிப்புக்காக இவற்றை சேகரித்துள்ளது என்பதை கண்டுபிடித்தார். இதனை பிஸ்ஸர் படம் பிடித்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளார். இந்தப் பதிவுக்கு பெரும் வரவேற்பு கிடைத்ததுடன் ஒரு அணில் நான்கே நாட்களில் சுமார் 160 kg வால்நட்களை சேமித்தது பெரும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## சித்திராங்கதாவின் காதல்

# சித்திராங்கதா

34

காவ்யமோகன்

வியூகங்களும், சூட்சுமங்களும் சூழ்ந்த வன்னியர் விழா ஒருபுறம் நல்லூர்க் கோட்டையில் கோலாகலமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மறுபுறம் கோப்பாய் நடன கூடத்தின் நிலவரமோ கதிரவன் உச்சங்காட்டும் பொழுதிலும் காரிருளை ஒத்திருந்தது. தோழி மார்கள் எத்தனைமுறை வந்து அழைத்தும் நடன கூடத்திற்கு வரமறுத்துவிட்டாள் சித்திராங்கதா. அவளது உள்ளத்து வானமே அப்படியொரு திசைகளறியா காரிருளில் இயக்கமற்று நின்றிருந்தது.

தன்கனவு நனவாக திடத்தோடு காத்திருந்த நாள் இது. இன்றைய நாள் மட்டும் எண்ணம் போல் அமைந்திருந்தால் இப்பொழுது நல்லூர்க் கோட்டை அரண்மனையில் அவள் வெளிச்சம் பரப்பியிருப்பாள். அபிநயங்களால் கோட்டையை அலங்கரித்திருப்பாள். திட்டமிட்டு வைத்திருந்த அபிநயக் கோலங்களை அவள் கற்பனை செய்து பார்க்கையில் உள்ளத்துள் துண்டுகளாக நொருங்கிக் கொண்டிருந்தாள்.

எப்படியோ இந்த நாள் வந்துவிட்டது. இல்லை என்று தெரிவிக்கப்பட்ட பின்னும் கூட இழையளவு நம்பிக்கையோடு காத்திருந்த நாட்கள் என்பது இப்போது முடிவாகி விட்டன. இனி இல்லை. யார் மீதோ வைத்திருந்த நம்பிக்கைகள் எல்லாம் அர்த்தமற்றுப் போய்விட்டன.

பெருந்துன்பத்தில் தனிமையில் உழலும் எந்த ஜீவனும் அந்த சமயத்தில் புத்தி உரைப்பதை ஏற்கமறுப்பேன் என்றே அடம்பிடிக்கும். துன்பத்தோடு தனிமை சேருகின்றபோது நேருகின்ற ஓர் அசாதாரண நிலமை அது. தன் துன்பத்திற்கு சிறிதும் காரணமில்லாத- ஆனால் தன் தனிமைக்கு துணையாய் இருந்திருக்க வேண்டிய நபர் மீது இனம்புரியாத கோபங்கள் உருவாகும்.

சித்திராங்கதா உள்ளத்திலும் அப்படியானதொரு கோபமே உருப்பெற்றிருந்தது. அவள் தன் தனிமையின் துணையாய் யாரை நினைத்திருந்தாள் என்பதை வாசகர்கள் ஊகித்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. ஆம் வருணகுலத்தானைத் தான்.

ஆர்ப்பரித்து அலையும் பெருங் கடலைத் தாண்டி புரவியில் வந்த மாவீரன் என்று யாரை நினைத்திருந்தாளோ அந்த மாவீரர் கூட தன் கண்ணீரை கண்டு கொள்ள எண்ணவில்லை என்பது அவளிற்கு தகிக்க முடியாத வேதனையைக் கொடுத்தது. இதுவரை நாமும் வருணகுலத்தானுடன் மட்டுமே பயணித்திருந்தோம்.

அவனுடைய எண்ணங்களூடாகவே நாம் சித்திராங்கதாவையும் நோக்கியிருந்தோம். ஆனால் இப்போது முதன் முதலாய் தனிமையில் வாடும் சித்திராங்கதாவின் உள்ளத்து உணர்வுகளை அவள் அருகில் சென்று கொஞ்சம் புரிந்து கொள்ள முயற்சி செய்வோமா?

நாட்டியமே விளையாட்டு. நாட்டியமே பொழுது போக்கு. நாட்டியமே வாழ்வு. நாட்டியமே உயிர் என வளர்ந்து வந்தவளிற்கு அரங்கேற்றம் என்பதொரு நாள் அரசவையில் குறிக்கப்பட்ட செய்தியினை அவள் வாழ்வின் வரமென கருதினாள். முதன்முதலாய் மேடையேறப்போகும் அரசவை குறித்து கற்பனைகளால் ஏராளம் ஓவியங்களை உள்ளத்தில் தீட்டி வைத்திருந்தாள்.

ஒருநாள் தஞ்சைவீரர் வரவை பற்றியும், அந்நாளில் சித்திராங்கதா நடன நிகழ்வு இருத்தல் அழகு என்று மாமன்னர் வேண்டியது பற்றி எச்சதத்தர் சித்திராங்கதாவிடம் கூறியபோது தன் முதல்மேடை குறித்த கற்பனை ஓவியங்களை பொய்யாக்கி "அரங்கேறமுதல் மேடையேற மாட்டேன்" என்ற உறுதிமொழியினை மறுமொழியாக்கினாள்.

சித்திராங்கதா சம்மதம் தெரிவிக்க வேண்டி மாவீரன் வருணகுலத்தான்



வீரதீர புகழ்களை அடுக்கடுக்காய் எடுத்துரைத்தார் எச்சதத்தர்.

“விஜய நகர இராச்சியத்திற்கே பெருஞ்சோதனை வந்த வேளை காவிரிக்கரையில் அன்று மாபெரும் போர் மூண்ட போது வருணகுலத்தான் நிகழ்த்திய வீரசாகசங்கள் எம் இராச்சியத்தில் அனைவருமே காது குளிரக் கேட்டிருந்தோம். அந்த மாவீரனை பார்த்து பாராட்ட வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தோம். ஆனால் அவரே இப்போது எமக்காக தஞ்சைப்படை தாங்கி வருகிறார் என்பது எம் பெரும் பாக்கியமாகும். நம் தாயகம் தலை நிமிர காரியத்துணையாய் வந்திருக்கும் புகழ் மிகுந்த வீரனுக்கு வரவேற்பு நிகழ்த்த உன்னை விட சிறந்தவர் இங்கு வேறுயாருமில்லையேயம்மா” என்று தொடர்ந்து அவர் கூறிய வார்த்தைகளால் அவள் அம்மாவீரனை தன் அகக் கண்களால் கற்பனை செய்து பார்த்தாள்.

எச்சதத்தர் கூறிய வார்த்தைகளால் அவள் உருவகித்த அந்த உருவம் அவளை அதிசயிக்க வைத்தது. தந்தை மேலும் மேலும் கேட்டதனால் தான் மேடையேற சம்மதிப்பதாய் பதிலுரைத்தாள். ஆனால் அவள் சம்மதத்தின் உண்மைக்காரணம் அவள் உள்ளத்தில் உருவகித்து வைத்திருந்த அந்த மாவீரனின் உருவம். ஆதலாலே “வண்ணமும் வடிவும் சென்று கண்டிலன்” என்கிற நாவுக்கரசரின் இனிய திருமுறையினை மாவீரனுக்கு மேடையில் அபிநயப் பரிசாக்க முடிவு கொண்டாள்.

வருணகுலத்தானிற்கு வாள் வழங்கும் விழாவில் அவள் மேடையேறி ஆடிய காரணம் எச்சதத்தரோ, மாமன்னரோ அல்ல. வருணகுலத்தான் மாத்திரமே ஆகும். அபிநயம் ததும்பிய கண்களோடு நொடி நொடிப் பொழுதுகளில் அந்த மாவீரனின் உருவத்தினை கண்டு தன் உள்ளத்தில் கோர்த்துக் கொண்டாள். தன் சிந்தனையில் உருவான அந்த உருவத்தோடு இந்த உருவத்தை பொருத்திப் பார்க்கையில் அவள் அடைந்த ஆச்சரியமும், ஆனந்தமும் அவளால்க் கூட அபிநயம் காட்ட முடியாததாகும்.

அந்த மாவீரனின் கண்கள் தன்னையே நோக்கி நிற்கின்றன என உணர்ந்த பொழுதுகளில் தன் பார்வையை இரகசியமாக்கி தேடும் கண்களை தவிக்கச் செய்யும் நாடகமெல்லாம் மேடையில் நின்று இவள் ஆற்றிய சூட்சுமங்களே ஆகும்.

மேடையில் அவள் இறுதி வணக்கம் கூறிய நொடி “வேண்டாம்” என்பது போல் பொறுமையிழந்து தலையசைத்த வருணகுலத்தானை ஓரக்கண்களால் இவள் கண்டபோது இவள் உள்ளங் கொண்ட களிப்பை முகம் வெளிக்காட்ட முன்னரே அவசரமாய் மேடையை விட்டு இறங்கி விட்டாள்.

அன்றைய அந்திப் பொழுதிலேயே நடன கூடத்தில் கூடி நின்ற

தோழிகள் அவளை பரிகாசம் செய்த நொடிகளை கோபிப்பது போன்ற பாவனையில் இரசித்துக் கொண்டிருந்தாள். தஞ்சைமாவீரர் புரவியில் வந்து தன்னை இப்போதே அழைத்துக் கொண்டு போய்விடுவார் போல இருக்கிறதே என்று தோழிகள் பரிகாசம் நிகழ்த்திய கணத்திலே புரவியில் நடன கூடத்தை வந்தடைந்திருந்தான் வருணகுலத்தான்.

எதிர்பாராத விதமாய்க் கண்டதும் தாழமுடியாத சிரிப்போடு தோழிகள் விலகியோடிச் செல்ல சித்திராங்கதா மட்டும் சிலையாகவே நின்றாள். எக்காரணங் கொண்டும் தன் உள்ளத்து உணர்வுகளை வெளிவிடுதல் ஆகாதென்ற உறுதியோடு அன்று வருணகுலத்தானோடு உரையாடினாள்.

தன் உறுதியை வெளிக்காட்டும் தோரணையில் வருணகுலத்தானை அளவுக்கதிகமாகவே நையாண்டி செய்து விட்டதாய் பின்னர் உணர்ந்து தான் ஏதும் பெருந்தவறு செய்துவிட்டோமோ என அவள் தன் அந்தரங்க இரவுகளில் தவிக்காத கணம் இல்லை என்று சொல்லலாம்.

கடத்தப்பட்ட மாருதவல்லியை மீட்டுக் கொண்டு காங்கேசந்துறையிலிருந்து தஞ்சைவீரர் வந்துகொண்டிருக்கிறார் என்கிற செய்தி அன்றொரு நாளில் வந்தபோது அந்தப் பெருங் கூட்டத்தில் ஒருத்தியாய் தானும் அந்த மாவீரத்தின் பேரழகை தரிசித்த சிறு நொடியினை எண்ணி எண்ணியே தன் நாட்கள் பலவற்றைக் கழித்தாள்.

“காத்திருந்த மாவீரர் இல்லம் நாடி வந்த போது என் போலிக் கௌரவத்திற்காய் அவரை ஏளனம் செய்து அனுப்பியது பெருங்குற்றம் தான். அந்த குற்றத்திற்காக எனக்கு விமோட்சனம் இல்லையா? என்னை மன்னித்து அருளமாட்டாயா? மாவீரனை மீண்டும் நான் எங்ஙனம் சந்திப்பேன்?” என மாயக் கண்ணனிடம் அவள் பிரார்த்தித்திருந்து விழி திறக்கையில் எதிரே வருணகுலத்தான் நின்று கொண்டிருந்த அந்த நாளில் கூட தன் குதூகலத்தை அவள் வெளிப்படுத்தாமல் கதைத்தாள். ஆனால் கடந்த முறைபோல ஏளனம் எதுவும் கூறி விடக்கூடாது என்பதில் மாத்திரம் உறுதியடைந்தாள்.

ஈசன் தனக்கென வரமாய் அளித்த ஆடற்கலையின் அரங்கேற்றம் காண கடல் - மலை தாண்டி வந்திறங்கிய மன்மதன்- மாவீரர் வருணகுலத்தான் என்பதை அவள் முழுமையாக நம்பியிருந்தாள். தான் நாட்டியம் கற்றது கூட அவனுக்காகத்தான் என உள்ளூற உணர்ந்தாள்.

இந்த மாவீரன் முன் தான் ஆடப்போகும் நாட்டிய அரங்கற்றமே தன் பிறவிப்பேறு என்று காத்திருந்தாள். அவன் தன் ஆட்டத்தைக் கண்டு உண்டு பருகுகின்ற காட்சியினை கற்பனையில் தீட்டி தீட்டி அழகு பார்த்துக் கொண்டருந்தாள். அவள் கற்பனை எல்லாம் நனவாக முன்பே கனவாகி காணமல் போய்விட்டதை

அவளால் எவ்வகையில் இப்போது தாங்க முடியும்?

கற்பனைகளால் அவள் கட்டிய கோட்டை இடிந்து சரியும் போது அந்த வலி ஓர் அமைதியான பூகம்பம்தான். யாரிடமும் அதை பகிர்ந்து கொள்ளவும் இயலாது. மூடி மனதிற்குள்ளே புதைத்து விடலாம் என்றாலும் கண்கள், காதுகள், மூக்குகள் எல்லாவற்றாலும் அவ்வேதனை புகைபோல் வெளிப்பட்டு நிற்கும். இந்தப் புகையினை மேலும் எரியூட்டுவது போல் யாரோ இருவர்கள் அவள் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

*கேட்போம்...*

## ‘கடவுளின் கண்கள்’

பல்கேரியாவில் உள்ள “கடவுளின் கண்கள்” என்று பெயர்பெற்ற குகை உள்ளது.

குகையின் மேலே உள்ள இரண்டு கண் போன்ற துளைகளுக்கு பெயர் பெற்றது, இது ”கடவுளின் கண்கள்” என்று அழைக்கப்படுகிறது. துளைகள், அரிப்பு மூலம் உருவாகி, குகைக்குள் ஒளியை ஊடுபுக அனுமதிக்கின்றன.



## பீட்சா சாப்பிட பெண்களுக்கு தடை



மத்திய கிழக்கு நாடான ஈரான் நாட்டின், ஐ.ஆர்.ஐ.பி., எனப்படும், இஸ்லாமிய ஈரான் குடியரசு ஒளிபரப்பு துறை, தொலைக்காட்சியில் தோன்றும் பெண்களுக்கான விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் வெளியிட்டு உள்ளது.

அந்த உத்தரவில், தொலைக்காட்சிகளில் தோன்றும் பெண்கள், சிவப்பு நிறத்திலான எந்தவொரு உணவையும் சாப்பிடவோ, குடிக்கவோ கூடாது எனவும் பெண்கள் கைகளில் கையுறைகளை அணிய வேண்டும் எனவும் பீட்சா, சாண்ட்விச் போன்ற துரித உணவுகளை சாப்பிடுவது போன்று தங்களை காட்டிக் கொள்ளக் கூடாது எனவும் பெண்களுக்கு தேநீர் கொடுப்பது போன்ற காட்சிகளில் ஆண்கள் நடிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





எஸ்.எஸ்.நுஜன்

T-20 உலகக்கோப்பை 2021

# அணிகளின் அலசல் – 04

## தென்னாப்பிரிக்கா

எப்போதும் பலம் பொருந்திய அணியாக இருந்து முக்கியமான தருணங்களில் தோற்று போகும் இவர்கள், இம்முறை கிண்ணம் வென்று அசத்துவார்களா?

டி கோக், மார்க்ரம் மற்றும் ஹென்ரிக்ஸ் என்ற தரமான Top Order துடுப்பாட்ட வீரர்கள் அணியில் உள்ளனர். மத்திய வரிசையில் அணித் தலைவர் பவுமா, மில்லர், க்ளாசென் மற்றும் வான் டெர் ட்யூஸென் உள்ளனர். சுழற்பந்து வீச்சில் தரமான கேசவ் மகராஜ் என்ற இடதுகை Finger Spinner மற்றும் தப்ராஸ் ஷம்ஸி என்ற இடதுகை wrist spinner கூட்டணி இருக்கிறது. வேகப்பந்து வீச்சாளர்களில் ரபாடா, நோக்கியா மற்றும் நிகிடி உள்ளனர். வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் என அனைத்திலும் சிறப்பாக செயற்படக்கூடிய வீரர்களை கொண்டுள்ள அணியாக திகழ்கிறது. ஏபி டி வில்லியர்ஸ் மற்றும் டுபிளெஸிஸ் இம்முறை அணியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னாள் வீரர் மார்க் பவுச்சர் அணியின் தலைமை பயிற்சியாளராக உள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் 2009 மற்றும் 2014 இல் அரையிறுதிக்கு முன்னேறியமை





தென்னாப்பிரிக்காவின் சிறப்பான பெறுபேறாக இருக்கிறது.

இதுவரை மொத்தமாக 30 ரி20 உலக கிண்ண ஆட்டங்களில் விளையாடிய தென்னாப்பிரிக்கா 18 வெற்றிகள், மற்றும் 12 தோல்விகளை சந்தித்துள்ளது. 2016 ரி20 உலக கிண்ணத்திற்கு பின்னர் தென்னாப்பிரிக்கா அணி, மொத்தமாக 51 சர்வதேச ரி20 ஆட்டங்களில் விளையாடி 27 வெற்றிகள், 23 தோல்விகள் மற்றும் 1 சமநிலையும் பெற்றுள்ளது.

## ஆப்கானிஸ்தான்

தாங்கள் விளையாடிய நான்கு ரி20 உலகக் கிண்ண தொடர்களுக்கும் தகுதிகாண் (Qualifiers) தொடர்களில் விளையாடி தகுதி




பெற்றிருந்தனர். இம்முறை, இலங்கை பங்களாதேஷ் அணிகள் எல்லாம் உலகக் கிண்ண தகுதிகாண் குழுநிலை (Qualifiering Group Stage) ஆட்டங்களில் பங்கேற்க ஆப்கானிஸ்தான் நேரடியாக சூப்பர்-12 க்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2016ம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சூப்பர்-10 க்கு முன்னேறியமை, ரி20 உலகக் கிண்ணத்தில் இவர்களின் சிறப்பான பெறுபேறாக இருக்கிறது.



அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நட்சத்திர வீரர் ரசித் கான் விலக சகலதுறை முன்னணி வீரரான மொஹம்மட் நபி அணியை தலைமை தாங்கிறார்.

அணியின் பந்துவீச்சு ரசித் கான், நபி, மற்றும் முஜிபுர் ரஹ்மான் என்ற சுழற்பந்து வீச்சாளர்களினால் பலம் பெறுகிறது. அதுவும் ஆடுதளங்கள் சுழற்பந்து சாதகமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேகப்பந்து வீச்சில் பலம் குறைவாக இருந்தாலும் நவீன் உல் ஹாக் என்ற இளம் வீரர் சிறப்பாக செயற்படு கிறார் பரீட் அஹ்மத், குல்படின் நைப் ஆகியோரும் உள்ளனர்.

Rahmanullah Gurbaz, Hazratullah Zazai மற்றும் Usman Ghani போன்ற அதிரடி துடுப்பாட்ட வீரர்களுடன் ஆஸ்கர் ஆப்கான் என்ற நிதானமான துடுப்பாட்ட வீரருமுள்ளார். அணித் தலைவர் நபியின் துடுப்பாட்ட பங்களிப்பும் அணிக்கு பலம் சேர்க்கும்.

ரி20 உலகக் கிண்ணத்திற்கு என்று முன்னாள் சிம்பாப்வே அணித்தலைவர் மற்றும் இங்கிலாந்தின் ரி20 உலகக் கிண்ணம் வென்ற பயிற்சியாளரான அன்டி பிளவர் (Andy Flower) ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராக உலகின் சிறந்த சகலதுறை வீரரில் ஒருவரான தென்னாப்பிரிக்காவின் முன்னாள் வீரர் லான்ஸ் க்ளூஸ்னர் உம் பந்து வீச்சு பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோன் ரைட் உம் உள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அணி முதன்முறையாக அரையிறுதிக்கு முன்னேறுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## செவ்வாய் கிரகத்தில் ஆறு, ஏரி இருந்ததற்கு அடையாளங்கள்

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த பிப்ரவரி மாதம் நாசா அனுப்பிய பெர்சவரன்ஸ் ரோவர், செவ்வாய் கிரகத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆறு, ஏரி உள்ளிட்ட நீர்நிலைகள் இருந்ததற்கான அடையாளங்களை படம் பிடித்து அனுப்பியுள்ளது.

நாசா அந்த படங்களை டுவிட்டரில் வெளியிட்டு, “விண்வெளியில் இருந்து, செவ்வாய் கிரகத்தை ஆராய்ந்து வரும் பெர்சவரன்ஸ் ரோவர், நீர்நிலையுடன் இருந்த ஜெசேரோ பள்ளத்தாக்கின் கடந்த காலத்தை பற்றிய அற்புதமான குறிப்புகளை எங்களுக்கு தந்தன. புவியியல் குறித்த இந்த ஆச்சரியங்கள் விஞ்ஞானிகளை உற்சாகமடைய செய்துள்ளது” என தெரிவித்துள்ளது.

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்தனவா என்பதை ஆராய அங்கிருந்து பாறை மற்றும் மண் துகள்களை சேகரிப்பதே பெர்சவரன்ஸ் ரோவரின் முக்கியமான பணியாகும்.

ஆனால் பாறை துகள்களை சேகரிக்கும் பெர்சவரன்ஸ் ரோவரின் முதல் முயற்சி தோல்வியில் முடிந்ததாக கடந்த ஆகஸ்டு மாதம் நாசா அறிவித்தது. எனினும் கடந்த மாத இறுதியில் செவ்வாய்கிரகத்தின் ஜெசேரோ பள்ளத்தாக்கில் இருந்து 2 பாறை துகள்களை பெர்சவரன்ஸ் சேகரித்தமையும் குறிப்பிடத்தக்கது.



| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| AB de Villiers | 2007-2016 | 30 | 29 | 5 | **717** | 79* | 29.87 | 500 | 143.40 |
| JP Duminy | 2007-2016 | 25 | 23 | 9 | **568** | 86* | 40.57 | 438 | 129.68 |
| JH Kallis | 2009-2012 | 15 | 13 | 1 | **433** | 73 | 36.08 | 368 | 117.66 |
| HM Amla | 2012-2016 | 14 | 14 | 2 | **376** | 58 | 31.33 | 295 | 127.45 |
| GC Smith | 2007-2010 | 16 | 16 | 0 | **352** | 41 | 22.00 | 306 | 115.03 |
| JA Morkel | 2007-2014 | 25 | 20 | 5 | **308** | 43 | 20.53 | 216 | 142.59 |
| F du Plessis | 2012-2016 | 9 | 9 | 0 | **271** | 65 | 30.11 | 199 | 136.18 |
| HH Gibbs | 2007-2010 | 12 | 12 | 1 | **265** | 90* | 24.09 | 211 | 125.59 |
| Q de Kock | 2014-2016 | 9 | 9 | 0 | **217** | 52 | 24.11 | 172 | 126.16 |

ரி20 உலக கிண்ணத்தில்
அதிக ஓட்டங்கள் பெற்ற தென்னாப்பிரிக்க வீரர்கள்

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| DW Steyn | 2009-2016 | 23 | 23 | 83.1 | 1 | 579 | **30** | 4/17 | 19.30 | 6.96 |
| M Morkel | 2007-2014 | 17 | 17 | 62.4 | 0 | 452 | **24** | 4/17 | 18.83 | 7.21 |
| Imran Tahir | 2014-2016 | 9 | 9 | 36.0 | 0 | 214 | **18** | 4/21 | 11.88 | 5.94 |
| WD Parnell | 2009-2014 | 9 | 9 | 29.5 | 0 | 207 | **13** | 4/13 | 15.92 | 6.93 |
| JH Kallis | 2009-2012 | 15 | 14 | 37.0 | 1 | 247 | **12** | 4/15 | 20.58 | 6.67 |
| J Botha | 2009-2012 | 14 | 14 | 40.4 | 1 | 265 | **11** | 3/16 | 24.09 | 6.51 |
| CK Langeveldt | 2010-2010 | 4 | 4 | 16.0 | 0 | 104 | **11** | 4/19 | 9.45 | 6.50 |
| RE van der Merwe | 2009-2010 | 9 | 9 | 31.0 | 0 | 202 | **11** | 2/14 | 18.36 | 6.51 |

ரி20 உலக கிண்ணத்தில்
அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய தென்னாப்பிரிக்க வீரர்கள்

| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Mohammad Shahzad | 2010-2016 | 14 | 14 | 0 | **323** | 68 | 23.07 | 261 | 123.75 |
| Asghar Afghan | 2010-2016 | 13 | 12 | 1 | **246** | 62 | 22.36 | 247 | 99.59 |
| Shafiqullah | 2012-2016 | 11 | 11 | 3 | **181** | 51* | 22.62 | 129 | 140.31 |
| Noor Ali Zadran | 2010-2016 | 8 | 8 | 0 | **174** | 50 | 21.75 | 180 | 96.66 |
| Samiullah Shinwari | 2010-2016 | 14 | 11 | 0 | **159** | 43 | 14.45 | 140 | 113.57 |
| Mohammad Nabi | 2010-2016 | 14 | 14 | 1 | **147** | 52 | 11.30 | 127 | 115.74 |
| Gulbadin Naib | 2012-2016 | 10 | 9 | 1 | **127** | 44 | 15.87 | 128 | 99.21 |

ரி20 உலக கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்ற ஆப்கான் வீரர்கள்

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Mohammad Nabi | 2010-2016 | 14 | 14 | 53.0 | 1 | 374 | **17** | 4/20 | 22.00 | 7.05 |
| Rashid Khan | 2016-2016 | 7 | 7 | 28.0 | 0 | 183 | **11** | 3/11 | 16.63 | 6.53 |
| Shapoor Zadran | 2010-2016 | 9 | 9 | 28.0 | 1 | 207 | **9** | 2/19 | 23.00 | 7.39 |
| Hamid Hassan | 2010-2016 | 6 | 6 | 20.3 | 0 | 114 | **7** | 3/21 | 16.28 | 5.56 |
| Dawlat Zadran | 2012-2016 | 10 | 10 | 34.0 | 0 | 275 | **6** | 1/22 | 45.83 | 8.08 |
| Amir Hamza | 2014-2016 | 5 | 5 | 19.0 | 0 | 135 | **5** | 2/32 | 27.00 | 7.10 |
| Samiullah Shinwari | 2010-2016 | 14 | 14 | 43.0 | 0 | 283 | **5** | 1/11 | 56.60 | 6.58 |

ரி20 உலக கிண்ணத்தில்
அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய ஆப்கான் வீரர்கள்